ஓம்.

# சுயமரியாதைச் சமரசச் சடங்கு விளக்கம்.

பலநண்பர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி

C. P. R. பாரதியாரவர்கள்

இயற்றியது.

"பொங்கும் மங்களம் எங்கும் தங்குக"

திரிசிரபுரம்

ஜனானுகூல அச்சுக்கூடம்

—

1929.

விலை அணு 3.

T21251

R004F03

ஓம்.

# சுயமரியாதைச் சமரசச் சடங்கு விளக்கம்.

பலநண்பர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி
C. P. R. பாரதியாரவர்கள்
இயற்றியது.

T. 21251
G. 69751

"பொங்கும் மங்களம் எங்கும் தங்குக"

திரிசிரபுரம்
ஜனானுகூல அச்சுக்கூடம்
1929.

விலை அணா 3.



ஸி. பி. ராஜகோபால பாரதி

## இச் சுயமரியாதைச் சடங்குப் புத்தகத்தை நம்மவர்களின் நன்மையைக் கருதி விரைவில் வெளி வரும்படித் துணைபுரிந்த கமிட்டி மெம்பர்களின் விவரம்.

---

திருவாளர். அ. சிவப்பிரகாசனர், சூசையப்பர் கல்லூரி,
*தமிழ்த் தலைமை ஆசிரியர்.*

,, வேணுகோபால் நாயுடுகாரு, ஷராப் வர்த்தகம்,
*சுயமரியாதைச் சங்கத் தலைவர்.*

,, கி. ஆ. பெ. விசுவநாதம் பிள்ளை, சுயமரியாதைச்
*சங்கச் செக்ரிடரி, புகையிலைமண்டி, திருச்சி.*

,, T. C. சிங்காரம் பிள்ளை, வைத்திய ஆசிரியர்.
*ஆயுள்வேத சித்த வைத்தியசாலை,*
*சைனு பஜார், திருச்சி.*

,, N. கோபாலகிருஷ்ணம் பிள்ளை, புகையிலை மண்டி,
*தஞ்சாவூர் ரோட், திருச்சி.*

,, து. ரெ. கோவிந்தராஜலு நாயுடு, மண்டி,
*மயிலஞ்சந்தை.*

,, N. சுப்பிரமணியம் பிள்ளை, எலெக்டிரிக்,
*கண்டிராக்டர், தென்னூர்.*

,, வேதாசலம் பிள்ளை, பி.எ., பி.எல்., வக்கீல்,
தென்னூர்.

,, T. S. பரங்கிரிவேல் பிள்ளை, முனிசிபல் கவுன்சிலர்,
*பீமநகர்.*

,, T. S. சஞ்சீவி ரெட்டியார், பீமநகர்.

,, பெருமாள் நாயுடு வெள்ளித்தொழிற்சாலை,
பெரிய கம்மாளத் தெரு.

,, தீ. காமாட்சியா பிள்ளை, கண்டித்தெருவு, சீரங்கம்.

,, பிச்சைமுத்துப் பண்டிதர், மருத்துவகுல சங்கம்

,, முத்துக்கோனர், ஷாப் வர்த்தகம்,
பெரிய கடைத்தெரு.

,, I. C. இராகவலு நாயுடுகாரு, மிராஸ்தார், திருச்சி.

**S. A. K. கலியப் பெருமாள் நாயுடு,**
உரிமையாளர், ஆஞ்சநேயர் வார்ப்படத் தொழிற்சாலை.

# விஷயக் குறிப்பு.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | கடவுள் வணக்கம் | i—ii |
| 2. | முன்னுரை | 1—11 |
| 3. | விவாகம் என்னும் மணம் | 11—28 |
| 4. | ஜன்மோற்சவம் (பிள்ளைப்பேறு) | 28—30 |
| 5. | நாமகரணம் (பெயரிடுதல்) | 31—34 |
| 6. | அசுபம் { பொது விதிகள் | .... 34—35 |
| | மரணம் | .... 35—38 |
| 7. | மரணத்திய மறுநாள் | ... 38—39 |
| 8. | பத்துநாளுங் கடந்த மறுநாள் | .... 39—47 |
| 9. | வருஷ திதி | .... 47 |
| 10. | கிரகப்பிரவேசம் (புதுமனைப் புகுதல்) | .... 47 |

ஓம்.

சடங்குகள் தொடங்குமுன் செய்யும்

## கடவுள் வணக்கம்.

---

அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமா யானந்த பூர்த்தியாகி
அருளொடு நிறைந்ததெது தன்னருள் வெளிக்குளே
அகிலாண்டகோடியெல்லாந்
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க்குயிராய்த் தழைத்ததெது
மனவாக்கினில்
தட்டாயனின்றதெது சமயகோடிகளெலாந் தந்தெய்வ மென்
தெய்வமென்
றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவும் நின்றதெது
எங்கணும் பெருவழக்காய்
யாதினும் வல்லவொரு சித்தாகி யின்பமாய் என்றைக்கு
முள்ளதெதுமேல்
கங்குல்பக லறநின்ற வெல்லையுளதெதுவது கருத்துக்
கிசைந்தததுவே
கண்டனவெலாமோன வுருவெளியதாகவும் கருதியஞ்சலி
செய்குவாம். (—தாயுமானவர்.)

---

ஏகமாய்ப் பலவாய் இயங்குவ நிலைப்ப எவையுமாய் அல்லவாய்
அவற்றை
வேகமாய் இயக்கி வெளியிடை நிறுவும் வினைதபு வினையுமாய்
(அனந்த
போகமாய் அவற்றைப் பொருந்துறு பொருளாய்ப் பொறுத்திடு
முதலதாய் அடியார்
மோகமாய் விளையும் முதுபயனதுவாய் மொழியுமோர்
பொருளினைத் தொழுவாம்.—(அ. சிவப்பிரகாசர்.)

---

உலகம் யாவையுந் தாமுள வாக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலாவிளை யாட்டுடையாரவர்
தலைவரன்னவர்க் கேசரண் நாங்களே.

—(கம்பநாடர்.)

---

பூநிலாய வைந்துமாய் புனற்கணின்ற நான்குமாய்
தீ நிலாய மூன்றுமாய் சிறந்தகாலிரண்டுமாய்
மீ நிலாய தொன்றுமாகி வேறுவேறு தன்மையாய்
நீ னிலாய வண்ணநின்னை யார்நினைக்க வல்லரே.
—(திருமழிசையாழ்வார்)

---

சடங்குகள் செய்தபின் செய்யும்

## கடவுள் பிரார்த்தனை.

### எண்சீர் விருத்தம்.

மண்முதலாம் ஐம்பூதம் ஆவாய்! போற்றி
மருவு பெருஞ் ஜோதிமய ரூபா! போற்றி
கண்கருத்துக் கெட்டாத கடலே! போற்றி
கவின்படைப்புச் செய்தளிக்கும் கடவுள்! போற்றி
எண்ணுசுகப் பெருநிலையே! போற்றி, போற்றி
எங்களுயிர்க் குயிரான இன்பே! போற்றி
நண்ணுசுகமுத்தியருள் நாதா! போற்றி
நாளுளும் எமைக்காத்தாள் நயந்து நீயே.

---

எச்சுப சடங்கு செய்யுமுன்னும்

## இல்லம் புனிதமாக்க விண்ணப்பிக்கும் தோத்திரப்பா.

### அறுசீர் விருத்தம்.

மாசு மறு தீட்டு மற்றும் மன்னுலகோர் சொல்லுங்குற்றம்
பேசுமவை இன்றி இன்னே பிறங்குமெழிற்றூய்மை பெற்றே
வீசுமண மனையேயாக விளங்கமலன் கருணைசெய்து
தேசுபெறவைக்க வென்னத் தேவனைத் துதிப்பம்யாமே.

ஓம்

# சுயமரியாதைச் சமரசச் சடங்கு விளக்கம்.

## முன்னுரை.

பல நூற்றாண்டுகளாய் வருணாச்ரம தர்மம் என்ற பெயரால் போலிப் பிராமணர் தங்களுக்குத் தாங்களே கேடுவிளைவித்துக்கொண்டதோடு நிற்காமல், பொது மக்கள் பாடுபட்டுத்தேடிய பொருளைக்கவரவேண்டி, ஆதாரமற்ற பல சாஸ்திரங்களாலும் கருடபுராணமென்னும் போலிக் கட்டுரையாலும் பொய்ச்சடங்குகளையும் பகட்டும் வடமொழி மந்திரங்களையும் நாட்டில் புகவிட்டு, ஜனங்களை அஞ்ஞானக் கடலில் ஆழ்த்தி, இதுகாறும் நய வஞ்சகத்தால் நாட்டைப் பாழ்படுத்திவரும் மோசடிகளை யுணர்ந்த பல ஞானிகள், மேதாவிகள், ஆசார சீர்திருத்தக்காரர்கள் போதனைகளால், சமத்துவம், சகோரத்துவம் சுயேச்சை சுயமரியாதை என்ற தத்துவங்கள் தலைஎடுத்தன. அதன் பயனாய், பொதுமக்கள் போலிப் பிராம்மணர் புகவிட்ட மந்திர தந்திரங்களை விலக்கி, தங்களில்லங்களில் நேரிடும் சுபாசுபங்களில் உண்மையான வழியில் செய்யும் சடங்குகளெவை யென்று விளக்கும்படி நண்பர்கள் பலர் கேட்பதால் இச் சிறுநூலை அடியேன் வெளியிட்டுள்ளேன்.

2, யான் ஏற்கனவே அச்சிட்டு வெளியிட்டிருக்கும் "சர்வ வருண சமரச விளக்கம்" என்னும் நூலில், பல நூற்றாண்டுகளுக்குமுன் இவ்விந்து தேசத்தில் குடியேறிய ஆரியர்கள், சுதேச குடிகளாகிய திராவிட மங்கோலிய வகுப்பாரோடு ஒற்றுமைப்பட்டு திராவிட பாஷையிலும், சாஸ்திரங்களிலும் தேர்ச்சியடைந்து

கலப்பு விவாகங்கள் செய்துகொண்டு பிரம்மஞ்ஞானத் தேர்ச்சியடைந்து ஜனங்களுக்கு பிரம்மபோதம் செய்துவந்ததால் உயர்பதவிகளாகிய பிராம்மணர், வேதியர், அந்தணர் என்னும் பட்டத்தை அக்காலத்தில் அடைந்து வந்தனரென்றும், அவர்களின் பின் சந்ததியார் பூர்வ உண்மைப் பிராமணர் சேர்த்து வைத்திருந்த செல்வச் செருக்கால் மதி இழந்து, அக்கிரமச் செயல்களால் சோம்பேறி இராமர்களாகி, ஒரு யோக்கியதையுமடையாமலே பிராம்மணரென்னும் பட்டத்தைப் பரம்பரையாக்கிக்கொண்டு, யாகாதிகளைச்செய்து ஊனைத்தின்று சோமப்பூண்டில் வடித்த கள்ளையருந்தி பல ஸ்திரீகளுடன் சம்போகித்து, ஆனந்தித்திருக்குமாறு பொருள் தேடவேண்டி, பற்பல வஞ்சனைகளால் சிற்றரசர்களை ஏமாற்றியும், பல அரசர்களைச் சூழ்ச்சிகளால் கொலை செய்தும், பல சிற்றரசர்களைக் கைவசப்படுத்திக்கொண்டு பவுத்தர்களையும், சமணர்களையும் பெருவாரியாய் அழித்து வந்தனரென்றும்; பொதுமக்களைப் பல ஜாதிகளாய்ப் பிரித்து, தங்கள் மேன்மையை உயர்த்திக்கொண்டு ஜன நாயக ஒற்றுமையை அழித்துவிட்டனரென்றும், அதுவும் போதாமல் தங்கள் கட்சியை வலுப்படுத்தவேண்டி தங்கள் கொடிய பஞ்சமா பாதகத்துக்கு உடந்தையாயிருந்து ஈனத்தொழில்கள் செய்து வந்தோருக்கும் பூணூலிட்டு அவர்களைப் பிராமணராக்கி, அரசர்கள் உதவியால் கிடைத்த தர்ம பரிபாலனம் கோவில் பூஜை முதலானவைகளுக்கு அவர்களை உதவியாய் வைத்துக்கொண்டு, யாருமறியாத வடமொழிச் சொற்கள் வாயில் புகாதார்க்கும் கைச்சாடைகளாகிய தந்திரங்களென்ற பெயரால் பூஜைகள் செய்யச் சொல்லிக் கோவில்களைத் தங்களதாகவே ஆக்கிக்கொண்டு தாங்கள்

புகவிட்ட விக்ரக ஆராதனை மூலமாய் வேண்டிய பொருளை அபகரித்து வந்தனரென்றும், பொய்ப் புராணங்களை யெழுதி தங்கள் பெரியோர்களாகிய உண்மைப் பிராமணரின் கொள்கை என ஏமாற்றி ஜனங்களுக்கு மோட்சமார்க்கத்தை அளிக்க வல்லதென புராணங்கள் மூலம் போதித்து, பயனற்ற பற்பல சடங்குகளைச் செய்யச்செய்து அவ்வழியாலும் கபடமற்ற மக்களின் பொருளை அபகரித்து வந்தனரென்றும், இன்னமும் வருகின்றனரென்றும், அப்பொய்ப் போதனைகளால், அவர்களின்பின் சந்ததியார் உண்மைத் தத்துவத்தைத் தாங்களும் மறந்து, கடவுள் ஒருவரே என்ற பேரறிவை இழந்து, சடங்குகளால் மோக்ஷம் கிட்டுமென்ற அஞ்ஞானத்தைத் தாங்களும் ஏறிட்டுக்கொண்டு "அகம்பிரம்மாஸ்மி" **நானே பிரம்மமாய் விட்டேன்** என்று கூறி எல்லோரையும் ஏமாற்றி வருகின்றாரென்றும், பொது மக்கள் தம் அடிமை நிலைமையை ஒழிக்க வேண்டி கற்பனையான ஜாதிக் கட்டுப்பாடுகளை அறவே ஒழிக்கவேண்டுமென்றும், உண்மை ஞானத்தை எய்த வேண்டின், மானிடரைப் போன்ற உருவுள்ள விக்கிரக ஆராதனையை ஒழிக்க வேண்டுமென்றும், நாராயணன், சிவன், விஷ்ணு, என்ற பேதங்கள் பாராட்டாது, அப் பெயர்கள் எங்கும் நிறைந்து அன்புருவாகிய கடவுளைக் குறிக்குமென்று பொருள் கொள்ள வேண்டு மென்றும், ஓரே முதற்கடவுளை பூர்வ திராவிட ஞானிகள் வணங்கி வந்த வண்ணம் உருவற்ற சுயம்பிரகாசமான ஆகாய லிங்கமாய் வணங்கவேண்டுமென்றும் உண்மையான அருளுருவக் கடவுளை மனோவாக்குக் காயங்கள் ஒருமித்து, தியானம் ஆடல் பாடலால் பிரார்த்தனைசெய்து மக்கள் செய்ய வேண்டிய எச்சடங்கையும் இனத்தார்

நண்பர்களுடன் கூடிச்செய்வதே உத்தமமென்றும் (வருண சமாச விளக்கத்தில்) கூறியுள்ளேன்.

3. ஒருவர் இல்லத்தில் நேரிடும் நன்மை அதாவது சந்தோஷத்தை உண்டாக்கும் நிகழ்ச்சி, சுபகாரியம் என்ற விவாகம் ஆகும். அதை நடத்தச் செய்யும் முறை விவாகச் சடங்கென்னப்படும். அவ்வில்லத்தில் நேரிடும், தீமை அதாவது துக்கக்குறியே அசுபமென்ற பெற்றோர்களின் மரணமாகும். அவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளே உத்தரசடங்கென்னப்படும். இப் பிரதானமான சடங்குகளைச் செய்ய உண்மை உணர்வு ஏற்பட்டதின் பின்னர் ஒவ்வொருவரும் செய்ய விரும்பும் மற்ற சிறுசடங்குகளைத்தாங்களே யூகித்துக்கொண்டு செய்யும் திறமை எவர்க்கும் வாய்த்துவிடுமாகையால் அவைகளை இச்சிறு நூலில் விளக்குவது பயனற்றதே யாகும்.

4. விவாகம் என்ற மணமாவது:—

"துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை"

என்ற கட்டளையின்படி இல்லறத்தை நடத்திவரும் தார்மிகளே துறந்தவர்க்கும், ஏழைகளுக்கும் இறந்தவர்க்கும் துணையாகவேண்டுமாதலால் அதுவே பெரிய தர்மமும் வாழ்க்கையுமாகும். அத்தருமத்தை எய்துவதற்கு ஓர் புருஷனும் ஸ்திரியுமே கூடி வாழ்க்கை நடத்த வேண்டியிருப்பதால், தக்க வயது அடைந்த பின்னர் அவர்கள் ஒன்றுகூடி இல்வாழ்க்கை நடத்தவேண்டியிருக்கிறது. அவ்வில்வாழ்க்கை நலம்பெறும் பொருட்டு

இவர்களுள் ஒற்றுமையும், சமாதானமும், சமரசவாஞ்சையும் விசுவாசமும், நம்பிக்கையும், அன்பும் பெருக வேண்டும். அதை எய்தும் பொருட்டு செய்துகொள்ளும் உடம்படிக்கையே விவாகச் சடங்கென்னப்படும். இவ்வண்ணமான உடம்படிக்கை செய்துகொள்வதற்கு, தங்களைப் படைத்த ஈசுவரனும், பெற்றோரும், பந்துவர்க்கங்களும், நண்பர்களும் சாட்சியாயிருப்பது அவசியமாதலால் அவர்கள் முன்னிலையில் விவாகச் சடங்குகளைச் செய்வது அவசியமாகும்.

5. தீமை அதாவது துக்கக்குறியாகிய அசுபம்:—பெற்றோர்களின் மரணகாலத்திலும் அதன் பின்னரும் புத்திரர் செய்யவேண்டிய கடமைகளை உத்தர கிரியை என்னப்படும். பெற்றோர்களுக்குச் செய்யும் கடமையாவது, தங்களை ஈன்றெடுத்த காலமுதல் அவர்கள் மரணம் வரையில் தங்களுக்குப்பட்ட பாடுகளையும், தங்கள்மேல் வைத்திருந்த அன்பு, கருணை, வாஞ்சை முதலியவைகளையும் நினைத்து அன்னார்பால் தங்களுக்குள்ள விசுவாசம் அதாவது நன்றியறிதலைப் பாராட்டி அப்பெற்றோரின் ஆன்மாக்கள் முத்திபெற வேணுமென்று ஈசுவரனுக்குச் செய்யவேண்டிய உருக்கமான பிரார்த்தனைகளே உண்மையான உத்தரச் சடங்குகளாகும். எவ்வாறெனில், பெற்றோர்கள் அன்னமய கோசமாகிய தூலசரீரத்தை விட்ட பின்னர் அவர்களின் ஆத்துமாக்கள் சூட்சும தேகத்துடன் இந்நில உலகைவிட்டு, ககனமார்க்கமாய் அந்தரலோகங்களைச் சேர்ந்து, தங்கள் தங்கள் புண்ணிய பாவத்துக்கேற்றவாறு சுக துக்கங்களை எய்துகின்றனர். முத்தி பெறாத அவ்வான்மாக்கள், முத்தி பெறும்பொருட்டு கருணைக் கடலாகிய ஈசுவரன் விசேட கடாட்சமென்ற அருளால்

சூட்சம சரீரத்துடன் கூடிய ஆன்மாக்கள் நில உலகைச்சுற்றி யிருக்கும் ஆகாயத்தில் பதிக்கப்பெறுகின்றன. ஆதித்யன் (சூரியன்) தன் கிரணங்களால் ஆகாயத்தில் மங்கிக் கிடக்கிற ஆத்துமாவைக் கிரகித்து மேகத்தில் புகவிட அம்மேகபருவதம் மழை உருவமாய் பூமியிலிறங்கி ஜலரூபமாய் உண்ணும் தானியத்துக்கு ஆதாரவாயிருந்து அதனுள் பிரவேசித்து அந்த தானியம் மக்கள் சரீரத்தில் பிரவேசித்து (புகுந்து) சுக்கிலமாய்த் திரண்டு ஸ்திரி புருஷ சம்யோகத்தால் ஸ்திரீ சரீரத்தில் புகுந்து "பஞ்சம் யாவாஹுதாவா பஹ, புருஷவசசோபவந்தி" என்கிறபடி கர்ப்பமாய் பரிணமித்து அக்கர்ப்பம் பெருகி ஈசுவரனுக்கு வழிபாடுபடும்படியான மானிடப் பிறவியை எய்துகிறதென்று வேதாந்தத்தில் "பஞ்சாக்கினி வித்தை" யென்ற ஓர் பகுதியில் சொல்லப்பட்டிருக்கிறது. மற்றும் பல சாஸ்திரங்களில் இவ்வான்மாக்கள் அதனதன் புண்ணிய பாவங்களுக்கேற்றவாறு மற்ருேர் கருப்பத்தைப் பற்றிக்கொண்டு இத்தூல தேகத்தை விடுவதாகவும் கூறப்பட்டுள்ளது. சில சாஸ்திரங்களில் இச்சரீரம் பிருதிவ்யாதி பஞ்சமகா பூதங்களால் ஆக்கப்பட்டதென்றும், சூட்சும தத்துவங்களாலாய மனிதன், நாளடைவில் அல்லது நோயால் பஞ்சபூத ஏற்றக் குறைவுகளேற்பட்டு மரண மடைந்தபின் அப்பஞ்ச பூதங்கள் மகா பஞ்சபூதங்களோடு கலந்து விடுகிறதென்றும் ஜனனமென்பது மனிதன் ஜீவனேடிருந்த காலத்தில் ஜெனிப்பித்த மக்களென்றும் கூறப்பட்டுள்ளது. இப்பாகுபாடுகள் எவ்வாருயினுமாகுக. இவ் வன்னமய கோசமாகியஸ்தூலதேகத்தை விட்டுவிட்ட சூட்சும ஆன்மாக்களுக்கு இவ்வுலக ஆகாரம், வண்டி,

வாகனம், பாதரக்ஷை, வஸ்திரங்கள், ஔஷதங்கள் முதலானவைகளின் அவசியம் விடப்பட்டுப் போனதால் ஆன்மாக்களின் பேரால் போலிக்குருக்களுக்குச்செய்யும் தானங்களும், வெகுமானங்களும், லஞ்சங்களும் ஆன்மாக்களை ஒருக்காலும்போய்ச் சேராதென்பது உண்மைத்தத்துவமாகும். ஆகையால் பல நூற்றாண்டுகளாய் போலிக் குருக்களும், புரோகிதர்களும், பிறர் சொத்தைக் கவரவேண்டி பித்தலாட்டங்களும், மோசடிகளும் பாசாங்குகளும் செய்து கபடமற்ற மக்களை ஏமாற்றி தாங்களும் கெட்டுப்போவதால் அவர்களைக் களைந்து விடுதலே இருதிறத்தினரும் விரும்பத்தக்க கடமையாகும்.

6. இப்போலிக் குருக்களைக்களைந்தபின்னர்எவரைக் கொண்டு விவாக உடன்படிக்கைகளையோ, சவச்சடங்குகளையோ செய்யவேணுமென்ற கேள்விபிறக்கும். பூர்வ திராவிடர்கள் செய்து வந்ததுபோல, இக்காலத்தும் அனேக மக்கள் கூட்டத்தினர், தங்கள் குடும்பத்தலைவர்கள் அல்லது குலத்தலைவர்கள் அல்லது நண்பர்களைக் கொண்டு இந்நூலில் கூறியவண்ணமோ அல்லது மாறுபட்டோ சொல்லச்சொல்லி, தாங்களும் மனோவாக்குக் காயங்களால் அன்புநிறைந்த உருகியமனதோடுகடவுளைப் பிரார்த்தனைசெய்வதே உத்தம சடங்குகளாகும். சடங்குகள் முடிந்தபின் சடங்கில் சம்மந்தப்பட்டவர்கள், பந்துக்கள், ஏழைகள் முதலானவர்களோடு கூடியுண்பதோடு ஏழைகளுக்கு தங்கள் சக்திக்கிசைந்தவாறு சகல தானங்களும் ஈசுவரன்பேரால்செய்து அவர்களை மகிழவைப்பதே மிக மிக உத்தம காரியமாகும். சடங்குகளின் உண்மைத்தத்துவமும் இதுவே.

7. தாங்கள் சொல்லும் மந்திரங்களின் பொருளை அறியாத போலிப்புரோகிதரிடம் நாளிதுவரை சடங்கு களைச்செய்துகொண்டு இன்னமும் அவ்விதமான சடங்கு களில் பற்றுடையோருக்கும், புண்ணியாவசனம், ஓமத் தீவளர்த்தல், அசேதனங்களாகிய நவக்கிரகங்களைப்பூசிப்ப தில் பற்றுள்ளோருக்கும் சொல்லப்புகுவது யாதெனில், அணுவுக்குள் அணுவாயும், நீருக்குள் நீராயும், உயிருக் குள் உயிராயும், கரந்தசில்லிடந்தோறும், இடந்திகழ் பொருள்தோறும் கரந்து எங்கும்பரந்து வியாபித்து சுயம்பிரகாசமான எல்லாம்வல்ல இறைவனை உருகியமன தோடுசெய்யும் பிரார்த்தனையே வலுவுள்ள மந்திரமாகு மென்றும், புரோகிதர்சொல்லும் பொருத்தமும் பக்தியு மற்ற மந்திரங்களால் எவ்விதபயனும் உண்டாகாதென் றும் உறுதிகூறுவோம்.

ஈண்டுக் கூறப்போகும் சடங்குமுறைகள் இப்போது புதிதாகக் கற்பிக்கப்படுவனவல்ல. ஆரியமத உண்மைச் சித்தாந்தங்களையும், தத்துவ சாஸ்திரங்களையும், இப் போது சிறப்பாய் வழங்குகிற பலவகையான சமயங்க ளுடைய கோட்பாடுகளையும் சந்தேக விபரீதங்களற உணர்ந்து; இந்துபைபிள் என்ற ஆரியசத்திய வேதமென் னும் நூலை நமது நாட்டுக்கு உபகரித்த கோயமுத்தூர் ஸ்ரீமான் பகடால நரசிம்முலு நாயுடு அவர்களும் அவரைச் சார்ந்த கூட்டத்தினரும் கொண்டாடிவந்த சடங்கு முறைகள் அக்கூட்டத்தைச் சார்ந்தவர்களால் நாளிது வரையில் கைக்கொண்டு நடத்தப்பட்டு வருகின்றன. அவைகளையே ஒருவாறு தொகுத்து யாம் ஈண்டு விளக்கு கின்றோம்.

குறிப்பு:—விவாகம் செய்வதற்காக ஏற்படுத்தும் வேதிகை (மணவறை)யில் ''முகூர்த்தக்கால்'' என்று தமி

ழரும், பாலகம்பம் என்று தெலுங்கரும் ஓர் பாலுள்ள மரக்கிளையை மணவறையில் கீழ்புறம் நாட்டுதலும், நவ தானியங்களை தண்ணீரில் ஊரவைத்திருந்து மணவறை ஓரத்தில் தண்ணீர்நிறைந்த ஓர்புது மண்பானையின் அடிப் பக்கத்தில் செம்மண்கொட்டி அதன்மேல் தானியமுளை களை வளரவிடும் வழக்கமும் உண்டு. இதன் உண்மை யென்னவெனில் ஸ்ரீபுத்தபிரானுக்கு விவாகம்செய்ய எத் தனித்த காலத்தில் பர்வதராஜன் என்ற பெயர்கொண்ட ஓர் மன்னனின் சுபுத்திரியாகிய உமையென்னும் வய தடைந்த கன்னிகையானவள், எவர் பட்டுப்போன மரக் கட்டையையும் வருத்ததானியத்தையும் தம்ஸ்பரிசத்தால் முளைக்கச் செய்வரோ அவரைக் கணவராக வரிப்பே னென்று சுயம்வரம் நாட்டியதற்கிணங்க புத்தபிரான் அவ்வண்ணம் செய்தார். அச்சரிதத்தை மறவாது புத்தர் கள் மேற்கூறியவண்ணம் செய்துவந்ததை இந்நாட்டுத் தமிழ் தெலுங்கு மக்களும் பின்பற்றிவருகின்றனர். இக் காலத்தில் அம்மதத்தைப் பின்பற்றாதார்க்கு அச்சடங்கு பயனற்றதெனத் தெளிவாகும்.

ஆரியசாஸ்திரங்களில் எட்டுவகையான மணங்கள்கூறியிருக் கின்றன. தமக்கிஷ்டமான நாயகனையோ நாயகியையோ முழுமன மொத்து மணம் புரிதலே உத்தமமானது. பெற்றோர்கள் இதற் கிசைந்து நடத்தலே நலந்தரும். ஆனால் மணமகனையும் மண மகளையும் பெற்றவர்கள், தம் குழந்தைகளின் சுகத்தைக் கருதியே சம்மந்தம் செய்ய விருப்பங்கொள்ளுவராதலால் அவர்கள் கருத் தையும் கூடுமானவரையில் தழுவிச் செய்வதே உத்தம விவாக மாகும். விவாகச் சடங்கு முடிந்த தினத்தின் இரவில் சாந்தி முகூர்த்தம் செய்து விடவேண்டும். இதுவே சாஸ்திரத்தின் கட்டளையாதலால் மணமகள் பருவமடைந்தவளா யிருக்கவேண் டும். வீண் சடங்குகளும், செலவுகளும் விலக்கவேண்டும். தெருத்தெருவாய் ஊர்வலஞ்செய்தல், பெரியாண்டவனுக்குப்

பூசை போடுதல், காட்டேரிக்கும், கிராமதேவதைக்கும் ஆடு வெட்டிப் பொங்கலிடுதல், தாலிகூறை வைத்துப் படைத்தல், முகூர்த்தக்கால் குழியில், முத்து பவளம், செம்பு, பொன் வெள்ளி போடுதல், முகூர்த்தக்காலுக்கு மஞ்சள், குங்குமம் பூசி மாவிலை கட்டுதல், கட்டுக்கழுத்திகள் கம்பத்தைத்தொட்டு நடுதல், பெண்ணுக்கும் பிள்ளைக்கும் இரவல் நகைகளை வாங்கி அணியச்செய்தல், தம்பதிகளுக்கு நலுங்கிடுதல், சோபனப்பாட்டு பாடுதல், பாலை அரசாணிக்காலில் இடுதல், சாலும் கரகமும் வைத்தல் மாஉரலில் குடவிளக்கு நூற்றெட்டு கிளை விளக்கு, பல விளக்கு, காமாட்சி விளக்கு வைத்தல், ஈசான்ய மூலையில் மஞ்சள்வாரு வாராய்ப்பூசி அம்மி குழவிவைத்தல், அனுவசியமாக டமாரா, மேளம், தஞ்சாவூர் மேளம், பேரிவாத்தியங்களால் கேட்போர் காது செவிடு படும்படிச் செய்தல், உபநயனம்செய்தல், பாத பூஜை செய்தல், மைத்துனன் பாதரட்சைகளைப் போடுதல், வெள்ளி மிஞ்சி தொடுத்தல், காசியாத்திரை பிறதேசம்போதல், கோவிலுக்குப்போய் சூரைத்தேங்காய் உடைத்தல், அம்மியில் பெண்ணின் காலைத் தூக்கிவைத்தல், அருந்ததி காட்டல், அரசாணிசுற்றி வருதல் பெண்களுக்குப் பணம் போடுதல், கலியாணப் பெண் மாப்பிள்ளை தாடையில் அப்பளத்தாலடித்தல் அசங்கியமான கேலிப்பாட்டுகள் பாடுதல் முதலான அறியாமையால் செய்துவரும் வழக்கங்கள் அவசியமானவை அல்ல. அவைகளைக் கைக்கொண்டு வீணுகப் பணச்செலவு செய்தல் பொருந்தாது. இவைகளால் ஆகும் செலவை மீதப்படுத்திப் பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் இல்லற வாழ்க்கைத் தொடக்கத்துக்கு மூலதனமாகக் கொடுத்தலே சிறப்பாகும் கடன்பட்டு இவ்வழக்கங்களைச் செய்வது பேதமையே யாகும்.

மரணம் :—ஆதிகால புத்தர்கள் அஹிம்சா தருமத்தை முழுதும் பின்பற்றி சீலமாய்நடந்து நீண்ட ஆயுள்வாழ்ந்து வயோதிகம்முற்றி பிரஞ்ஞையற்றகாலத்தில் அவர்களை சமாதிப்படுத்தும்பொருட்டு நிலவறைகளைக்கட்டி, அந்நிலவறையில் வீற்றிருக்கச்செய்து, மேல்

பாகத்தை கற்களால் மூடிவைத்திருந்து சில நாட்கள் சென்றபின் கற்களைஎடுப்பித்து சமாதியில் வைக்கப்பட்ட பெரியார் உயிர்நீத்தபின்னரும் சமாதியாகிய வீற்றிருக்கும் நிலைதவறு திருப்பாராயின், அப்பரிசுத்த சரீரத்தைச் சுற்றி உப்பு கற்பூரம் முதலியவைகளால் நிரப்பி பந்துக்களெல்லோரும்சேர்ந்து விழாவாய்க் கொண்டாடி, ஏழைகளுக்கு எல்லா தானங்களும் அளித்து, இறந்தவரின் மக்களைக்கொண்டாடி, அவர்களுக்கு புதுவஸ்திரங்களால் அலங்காரம்செய்து தலையில் பாகைகட்டி மரியாதைசெய்வது வழக்கம். இவ்வழக்கத்தின் உண்மைத்தத்துவத்தை அறியாதே தமிழ்நாட்டார் அப் பயனற்ற கிரியையை அநுஷ்டித்துவருகின்றனர்.

C. P. R. பாரதி.

---

## விவாகம் என்னும் மணம்.

1. விவாகம்செய்ய நிகூஷயித்தவீட்டை சுண்ணும்பு முதலானவை பூசி சுத்திசெய்து மெழுகி கோலமிட்டு மா வாழை கமுகு முதலியவைகளைக்கட்டி அலங்கரிக்க வேண்டும்.

2. அவ்வீட்டின் விசாலமான பாகத்தின் நடுவே விவாகச் சடங்கு நடத்தும் பெரியாரும் மணமகனும், மணமகளும், அமரும்படியாய் ஓர் வேதிகை போட்டு (மணவறை) அதைப்புஷ்பங்களால் அலங்கரிக்கவேண்டும்.

3. சடங்குகள் தொடங்கும் காலத்தில் பெரியார் வடதிசை நோக்கியும் மணமகனும் மணமகளும் கிழக்கு மேற்கு திசைகளை நோக்கியும் அமர்தல் தகுதியாகும். திருமங்கலியம் பூட்டுகிறவரையில் தம்பதிகளுக்கு மத்தி

யில் ஓர் திரை யிடலாம். மாங்கல்யதாரணத்தின்பின் தம்பதிகள் ஒருமித்து கீழ்த்திசைநோக்கி அமரவேண்டும்.

## பிரம்மப்பிரார்த்தனை செய்யவேண்டிய முறை.

## திருமண நிறைவுப்பா.

### எண்சீர் விருத்தம்.

நித்தனே! நின்மலனே! நீக்கம்இன்றி
நிறைந்துறையும் பெருஞ்சோதி நேயம்மேவ
அத்தனே! ஆருயிர்க்கிங் கான நல்ல
ஆருயிரே! சத்தியனே! அண்ணா! இந்த
உத்தமர்தாம் மணவாழ்வில் ஒன்றி நின்று
உடலுயிர்போல் உலகிதனில் ஓங்கி வாழ
இத்ததியே யுவந்தருள்வாய் இன்பச்சாட்சி
இனிநீயே இவர்க்குறுதி எல்லாஞ் செய்யே!

எந்த பரமேசுவரன், அக்கினியிலும், ஜலத்திலும், பிரபஞ்சமெல்லாவற்றிலும் நிறைந்து பிரகாசிக்கின்றானோ அத்தேவனை நமஸ்கரிக்கின்றோம்.

எல்லாவற்றிற்கும் பிரபுவானவனும், பிரபஞ்சகர்த்தனும், சிரேஷ்டமான ஈசுவரனும், பிரபஞ்சத்தை போஷிப்பவனும், சர்வ விக்கினங்களை நசிக்கச் செய்பவனும், அளவற்ற ஞான சொரூபனும், நிர்விகாரனுமான ஸ்ரீ பரப்பிரமத்தை வணங்குகிறேன்.

ஆதியந்த மற்றவனும், எல்லாவிதங்களிலும் பூஜிக்கப்படத்தக்கவனுமான பரமேசுவரன் எல்லாக்காலங்களிலும் நாம்செய்யும் காரியங்களை ஆசீர்வதிப்பாராக.

ஓ பரமேசுவரா! கருணையும், ஞானமும் எல்லாவல்லமையுமுடைய நினது கருணையைப்பெறத் தியானிக்கும் இன்னாள் மகா சுபகரமானநாள். இதுவே சகல பாக்கியங்களும் பெறக்கூடிய நற்சமயம். இந்த சுபமூகூர்த்தத்தில் இச்சுப கருமங்களைச்செய்ய அருள்வீராக. நவகண்டங்களில் ஒன்றாகிய இந்த பரதகண்டத்தில், மகாமேரு பர்வதத்தின் தெற்கிலுள்ள இந்த தமிழ் நாட்டில் இந்நகரில், இவ்வில்லத்தில், இன்னவருடம்........அயனம்........ருது........மாதம்........பட்சம்-........திதி.......நட்சத்திரம் ........வாரம்........தெய்தி-........ல் இன்னார்...........பேத்தி ........குமாரத்தி........வயது........பெயருடைய.........அம்மாளுக்கும்,........பேரன்........குமாரன்........வயது........ பெயருடைய மாப்பிள்ளைக்கும், விவாகம் நடத்துவதை அனந்த சொரூபியே, ஆனந்த சொரூபியே, அருள்ஸ்வரூபியே, நித்தியஸ்வரூபியே, ஞானஸ்வரூபியே, பரிசுத்த ஸ்வரூபியே. ஆசீர்வதிப்பீராக.

1. விவாகஞ்செய்துக்கொள்ளப்பட்ட வாலிபனும் கன்னிகையும் அவர்களைப்பெற்றோர் அல்லது உரிமை--யாளர்கள் சம்மதித்துக்கொண்டால் தேசாசார குலாசார வழக்கத்தை அநுசரித்து நிக்ஷய தாம்பூல விவாகத்தை பெரியோர்களைக்கொண்டு ஒரு வாரத்துக்கு முந்தியே கொண்டாடி, பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் வெகுமானமாக அடையாளங்கள் ஈயலாம். விவாகச் சீட்டுகளும் எழுதி பந்துவர்க்கங்களுக்கும் நண்பர்களுக்கும் தெரியப்படுத்தலாம். அன்றுமுதல் பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் அவரவர் வீட்டில் வாசனையுள்ள தைல ஸ்நானம் செய்வித்து நல் ஆடையாபரணங்களைத் தரிக்கச் செய்து பந்துமித்திரர்கள் புஷ்பங்களையும் அட்சதைகளையும் அவர்கள்மீது தூவி ஆசீர்வதித்து தேவகீதங்கள்

பாடவேண்டியது. மேளவாத்தியங்கள் செய்யச் செய்ய லாம் விருந்துகள் செய்யலாம்.

2. விவாக தினத்துக்கு முந்திய மாலையில் மண மகனை அலங்கரித்து சிறந்த வாகனத்திலேற்றி, பந்து மித்திரர்கள் புடைசூழ வாத்திய கோஷ்டியுடன் பெண் வீட்டுக்கு மணக்கோல பவனியாக வரவேண்டும். வீடு சமீபித்தவுடன் அவர்களை மரியாதையுடன் அழைத்துக் கொண்டுபோய் ஆசனங்களிலமர்த்தி மணமகளுடைய பிதா அல்லது சவரட்சிப்போர், வந்திருக்கும் பந்து மித் திரர்களை வணங்கி பந்து வர்க்கங்களை நோக்கி

...... கனவான்களே:—குறிப்பிட்ட சுபதினத்தில் லக்கி னத்தில் பரிசுத்தமான இந்த விவாக மகோற்சவத்தை நடத்திவைக்க உத்தரவுகொடுத்து ஆசீர்வதிக்கவேண்டு மென்று சொல்லவேண்டும்.

அவர்கள் அனைவருங்கூடி "சுவாஸ்தி" அதாவது "அப்படியே நடத்துவீராக" என்று சொல்லவேண்டும். விவாகதினத்தன்று பெண்ணுக்கும் மாப்பிள்ளைக்கும் அவரவர்கள் வழக்கப்படி தைலஸ்நானம் செய்வித்து புது ஆடையாபரணங்களைப் பெரியோர்களைக்கொண்டு ஆசீர்வதிக்கச்செய்து அவைகளை அணியச்செய்யவேண் டும். மாப்பிள்ளையும் பெண்ணும் தனித்தனி வீற்றிருக் கச்செய்து சடங்கு நடத்தும் பெரியார் கடவுள் பிரார்த் தனைசெய்யவேண்டும். அதன்பின்னர்மணமகனைநோக்கி

ஸ்ரீமான் பெயர் நீர் இந்த மணமக ளாகிய ஸ்ரீமதி அம்மாளை உமது மனைவியாக இருக்க விவாகம் செய்துகொள்ள சம்மதி த்து இருக்கிறீரா என்று கேட்கவேண்டும்.

மணமகன் "சம்மதித்திருக்கிறேனென்று பலமாகச் சொல்லவேண்டும்.

பிறகு பெரியார் மணமகளை நோக்கி ஸ்ரீமதி பெயர் ......................அம்மா, மாப்பிள்ளையாகிய ஸ்ரீமான்........ ..............அவர்களை உமது நாயகராக விருக்க விவாகம் செய்துகொள்ளச் சம்மதித்திருக்கிறீரா என்று கேட்க மணமகள் சம்மதித்திருக்கின்றேன் என்று எல்லோரு மறியச்சொல்லவேண்டும்.

## மணப்பொருத்தம் அல்லது தாராதத்தம்.

அதன்பின்னர் மணமகளைப் பெற்றவர் அல்லது உரிமையாளர் எழுந்துநின்று மாப்பிள்ளைக்கு தாராதத்தம் செய்யவேண்டும். எப்படியெனில்

கலியுகாப்தம் ௵ மீ
வாரம் தேதிக்குச் சரியான 19 ௵ மீ
வாரம் உ பக்ஷம் சுபலக்கினமாகிய இப்போது சர்வ சாக்ஷியாகிய பரமேசுவரருக்கு முன்பாகவும் பந்து மித்திரர்களறியவும் எனது சுபுத்திரி சிகாமணியாகிய ஸ்ரீமதி..........அம்மாள் என்னும் மணமகளை அணிந் திருக்கும் ஆடையாபரணங்களுடன் ஸ்ரீயுத...........அவர் கள் பேரனும் ஸ்ரீயுத..........அவர்கள் குமாரருமாகிய ஸ்ரீமான்..........அவர்களுக்கு தர்மபத்தினியாயிருக்கும் படி தாராதத்தம் செய்கிறேன். அவரும் இந்த பரிசுத்த பந்தத்துக்குட்பட்டு இன்றுமுதல் தமது சுபத்தினியாக போஷித்து பாதுகாத்து வருவாராக என்று எல்லோ ரும் கேட்கச்சொல்லவேண்டும்.

பிறகு மணமகன் எழுந்து சர்வசாட்சியாயும் சர்வ பரிபூரணருமான பரமேசுவரருக்கு முன்னிலையில் சகல

பந்து மித்திரர்களறிய ஸ்ரீயுக்த அவர்கள் பேத்தியும் ஸ்ரீயுக்த..........அவர்கள் குமாரத்தியுமாகிய ஸ்ரீமதி ...........அம்மாள் என்னும் மணமகளை எனது தர்மபத்தினியாக அங்கீகரித்துக்கொள்ளுகிறேன் என்றுசொல்ல

மணமகளின் தந்தை எழுந்து மாப்பிள்ளையைப் பார்த்து ஓமணமகனே—இன்றுமுதல் நீங்கள் அனுபவிக்கும் இகபரசுக போகங்களை எனது குமாரத்தியாகிய உமது மனைவியுடன் கூடி அனுபவிப்பதில் அசாரத்தையையாயிருப்பீரோ என்று கேட்க,

மணமகன் இகபர இன்பங்களை இருவருங்கூடியே அநுபவித்து ஆனந்திக்கிறோம் என்று சொல்லவேண்டும். பின்னர் மணமகனும் மணமகளும் எழுந்து நிற்க சடங்கு பெரியார் மணமகளுடைய வலது கையையும் மணமகளுடைய வலது கையையும் சேர்த்து பரிமளமுள்ள புஷ்ப மாலையினால் கட்ட, மணமகன் மணமகளைப் பார்த்து ஸ்ரீமதி..........கன்னிகையே இந்த சுபதினத்தில் பரிசுத்தமுள்ள பரமேசுவரருக்கு முன்பாக சகல பந்துமித்திரர்களறிய உன்னை எனது நியாயமான தர்மபத்தினியாக வகித்துக் கொள்ளுகிறேன் என்று சொல்ல

மணமகள் மணமகனைப் பார்த்து ஸ்ரீமான்........... என்னும் நாயகராகிய தங்களை இந்த சுபதினத்தில் பரிசுத்தமுள்ள பரமேசுவரர் முன்பாக சகல பந்து மித்திரர்களறிய எனது நியாயமான நாயகராக வகித்துக் கொண்டேன் என்று சொல்ல

மணமகன்—மணமகளைப் பார்த்து, வாழ்விலும் வறுமையிலும்,—வியாதியிலும்,—சவுக்கியத்திலும்,—சுகத்திலும், துக்கத்திலும்,—சங்கடத்திலும் சந்தோஷத்திலும்

நான் உள்ளவரையில் உனது க்ஷேமவாழ்வுக்காக வேண்டிய முயற்சிசெய்து விருத்தியாக்குவேன் என்று சொல்ல

மணமகள் மணமகனை நோக்கி, வாழ்விலும், வறுமையிலும்—வியாதியிலும், சவுக்கியத்திலும்—சுகத்திலும், துக்கத்திலும்—சங்கடத்திலும்—சந்தோஷத்திலும்—நான் உள்ளநாள் வரையில் உங்களுடைய க்ஷேமத்தை விருத்தியாக்குவதில் விடாமுயற்சி செய்வேனாகவும் என்று சொல்லவேண்டும்.

பிறகு மணமகன் மணமகளைப் பார்த்து இன்று முதல் எனது உயிரும் இருதயமும், உனது உயிரும் இருதயமாகவும்—உனது உயிரும் இருதயமும், எனது உயிரும் இருதயமுமாகவும் பந்தப்பட்டு இருவருடைய இருதயமும் ஒன்றாகி பரமேசுவரருடையது ஆகுக என்று சொல்ல,

மணமகளும் அப்படியே சொல்ல,

மணமகன் மணமகளைப் பார்த்து, இன்றுமுதல் உனது வாழ்க்கைத் துணை சிநேகிதனாகவும், நீ எனது வாழ்க்கைத்துணை சிநேகியாகவும் கூடிக்குலாவி, நமது சினேக பந்தம் என்றும் மாறாமலிருப்பதாக என்று சொல்ல, மணமகளும் மாப்பிள்ளையைப் பார்த்து, இன்று முதல் நான் தங்கள் வாழ்க்கைத்துணைவியாகவும் தாங்கள் எனதுவாழ்க்கைத்துணை நண்பராகவும் கூடிக்குலாவி நமது சினேகபந்தம் என்றும் மாறாமலிருப்பதாக என்று சொல்லவேண்டும்.

இவ்வித உடன்படிக்கை நடந்த பிறகு வாத்தியங்களை கோஷிக்கச்செய்வித்து தேசாசார குலாசாரப்படி மணமகன் மணமகளுடைய கழுத்தில் தாலியைக்கட்ட

லாம், அல்லது மோதிரங்களை மாற்றிக்கொள்ளலாம், புஷ்பமாலைகளை மாற்றிக்கொள்ளலாம். அப்படிச்செய்யும் போது சகல பந்துமித்திரர்களும் ஜெய ஜெய மங்கள முண்டாகக்கடவது என்று வாழ்த்தி அட்சதைகளை தம் பதிகள்மேல் தூவவேண்டும்.

பிறகு மணமகனும் மணமகளும் பரஞ்சோதியாகிய கடவுளுக்கு பல்லாண்டுபாடி

மணமகன்—ஓ பரமேசுவரா, இந்த விவாக உடன் படிக்கையை நிறைவேற்ற அருள் புரிவாய் என்று பிரார்த்திக்க, மணமகளும் அவ்வண்ணமே பிரார்த்திக்க பந்துமித்திரரனைவரும் அவர்கள்மீது அட்சதை புஷ்பங் களைத்தூவி ஆசீர்வதிக்கவேண்டும்.

இவ்வண்ணம் தர்ம விவாகஞ்செய்து கொண்ட தம்பதிகளுக்கு சடங்கு பெரியார் பின்வருகிறபடி புத்தி மதிகளைச் சொல்லவேண்டும்.

எப்படியெனில்,

இந்தச் சுபதினத்தில் கருணாநிதியாகிய சர்வேசுவர ருடைய கிருபாகடாக்ஷத்தினால், அவரது பரிசுத்தமும் ப்ரசன்னமுமான முன்னிலையில் விவாகமென்னும் பரி சுத்தக் கட்டுப்பாட்டினால் நீங்கள் ஒன்று சேர்ந்திருக்கி றீர்கள். நீங்கள் இந்த விவாகத்துக்குமுன், தனிமை யாயிருந்தபோது தனித் தனியாய் அவரவருடைய சுயலாபத்தை நாடியிருந்தீர்கள். ஆனால், இப்போதோ உங்களிருவருடைய பொது லாபத்தையும் விருத்தியாக்க வேண்டிய பொறுப்பு உங்கள்மேல் சுமந்திருக்கிறது. இதுமுதல் தான், நீங்கள் உண்மையான உலகவாழ்க்கைப் பிரயாணத்தில் காலிட்டிருக்கிறீர்களாகையால், வெகு

ஜாக்கிரதையாய் நடக்கவேண்டும். இவ்வுலக ஆடம்பரங்களைக்கண்டு மயங்கி, ஆசாபாசங்களில் சிக்கி, இகத்திலும் பரத்திலும் சாசுவித ஆனந்தமாயிருக்கும் பரமேசுவரரை மறந்து விடாதீர்கள். பரமேசுவரரையே முற்றும் நம்பி அவரையே அடைக்கலமாகக்கொண்டு உங்களிருவருடைய சுகத்தை விருத்தியாக்க பிரயத்தனப்படுங்கள். இல்லற காரியத்தை பரமேசுவரருடைய பிரதான காரியமாகப்பாவித்து ஜாக்கிரதையாய் நடத்துவதுடன், பரிசுத்த ஆஸ்திக மதப்பிரமாணத்துக் கிணங்க தாங்கள் செய்யும் சகல காரியங்களையும் ஈசுவர அர்ப்பிதம் செய்யவேண்டும். அதாவது உங்களிடத்தில் இருப்பனவற்றையெல்லாம் ஈசுவர அர்ப்பிதம் செய்துவிடில் அவர் உங்களை எல்லாவித தீங்குகளிலிருந்தும் விடுவிப்பார். அப்போது உங்கள் வீடானது பரமேசுவரர் வசிக்கும் தேவதாகிரகம்போல பரிசுத்தத்தினுல் பரிமளிக்கும். ஆகவே

மாப்பிள்ளையாகிய ஸ்ரீமான்............(பெயர்.)

உமது மனைவியினுடைய உண்மையான சுகத்தை விருத்தியாக்க உம்மாலான முயற்சிகளனைத்தும் செய்யவேண்டும். சுபதினமாகிய இன்றுமுதல் ஈசுவரர் உம்மீது வெகு பொறுப்பும் பெருமையுமான கடமையை சுமத்தியிருக்கிறுர், ஆகையால் கெட்ட எண்ணங்களையும் கெட்ட காரியங்களையும் விட்டு நற்காரியங்களையே செய்யவேண்டும். உம்முடைய இருதயமும் உமது மனைவியாருடைய இருதயமும் ஒன்றென்றே பாவித்து உலக சஞ்சாரம் செய்யவேண்டும். சத்திய சாம்பிராச்சியம் அடையும் வழியில் உம்முடைய ஆத்மாநந்த நிலையை விருத்தியாக்குவதைப்போல, உமது மனைவியா

ருடைய ஆத்மானந்த ஸ்திதியையும் விருத்தியாக்க வேண்டும். உமது போதனையினாலும் உமது நடவடிக்கையினாலும் உமது மனைவி, இல்லறக்கடமைகளைச் சீராக நடத்தவும் இருவரும் சமமாகவும் சிநேகிதர்களாகவும் இருக்கும்படி முயலவேண்டும்.

மணமகளாகிய ஸ்ரீமதி............(பெயர்.)

உமது எண்ணமும் வார்த்தைகளும் நடவடிக்கைகளும் உமது நாயகருடைய க்ஷேமத்தைக் கருதியவைகளாகவே இருக்கவேண்டும். இருதய பூர்வமாக உமது நாயகரை நம்பி உமது க்ஷேமத்தைக்கருதி அவர் கட்டளையிடும் சகல காரியங்களையும் சந்தோஷமாகச் செய்ய வேண்டியதன்னியில், எப்போதும் உமது நாயகருக் கடங்கி ஒடுங்கி பரிசுத்த மனைவியாயிருக்கவேண்டும். மேலும் வீணான காரியங்களில் பொருளைப் பாழாக்காமலும் வீண் சண்டை சச்சரவுகளுக்கு இடங்கொடாமலும் உமது எண்ணங்களையும் வார்த்தைகளையும் நடவடிக்கைகளையும் பரிசுத்தமான விஷயங்களில் போக்கி உமது நாயகருடைய உத்தம உதவியினால் உமது ஆத்மானந்த நிலைமையை விருத்தியாக்கவேண்டும்.

பிறகு மணம் நடத்துகிற பெரியார் பின்வருகிறபடி பிரார்த்தனைசெய்து முடிக்கவேண்டும்.

ஓ! கிருபாநிதியே பரமேசுவரா!

“ இப்போது விவாகம் செய்துகொண்ட தம்பதிகளை சத்தியமார்க்கத்திலும் சாந்த மார்க்கத்திலும் பற்றுள்ளவர்களாக்கி, அவர்களது வீட்டில் குடிகொண்டு அதை பரிசுத்தப்படுத்தி, அதனால் நினது பரிசுத்த ஆஸ்திக

மதப் பிரபஞ்சத்தில் பல்லாண்டு பல்லாண்டாக பிரகா சிக்கச்செய்வாயாக"

கீதங்களைப்பாடி, சபையாரனைவரும் சாந்தி சாந்தி ஹரி:ஓம் என்று சொன்னபின் மேளவாத்தியங்கள் முழங்க மணமகளையும் மணமகனையும் எழுப்பி ஆசீர் வதித்து வந்திருக்கும் இஷ்ட பந்துக்களுக்கு சந்தன புஷ்ப தாம்பூலம் கொடுக்கவேண்டும். இஷ்டமுள்ளவர் கள் வெகுமானங்கள் செய்யலாம். அந்தஸ்துக்குத் தக்க படி விருந்து முதலானவைகளைச் செய்யலாம். ஏழை களுக்கு தானதர்மங்கள் செய்வது இச்சுபசடங்கின் அவ சியமான பகுதியாகும்.

## மாப்பிள்ளைக்கு மணமகளுடைய பிதா சொல்லும் புத்திமதிகள்.

பிரியமுள்ள ஸ்ரீமான் (பெயர்) நீர் கல்வி கேள்விஞானத தில் சிறந்தவர். ஆகையால் நான் உமக்கு புத்திமதிகளைச்சொல் லத் தக்கவனல்ல. ஆனால் நீர் எவ்வளவு கல்விமானுகவும், செல்வ வானுகவும் இருந்தபோதிலும், இன்னும் இல்லறத்தின் சுகத்தை அனுபவித்தறியாத வாலிபராயிருப்பதாலும், இது விஷயத்தில் நான் அனுபவத்தால் கண்டறிந்து வயோதிகனுகவிருப்பதாலும் இன்று நீங்கள்பூண்ட இல்லறவாழ்க்கைப் பிரயாணத்தில், கவனிக் கவேண்டிய சில குறிப்புகளைமாத்திரம் தெரிவிக்கின்றேன், ஆகை யால் நான்சொல்லும் குறிப்புகள் உத்தமமாகத் தோன்றுமானல் அவைகளை அங்கீகரிப்பீரென்றே நம்புகிறேன். அதாவது நீரும் எனது அருமைக்கண்மணியாகிய குமாரத்தியும், இரு வரும் ஒருமனப்பட்டு விவாகபந்தமென்னும் பரிசுத்த வாழ்க்கைத் துணைவர்களாக இருக்க இன்று உடன்பட்டீர்கள். இன்று நீங்கள் இருவரும் கூடிகட்டுப்பாடுசெய்துகொண்ட இந்த விவாக பந்தத்துவத்துக்கு மிஞ்சின பந்தத்துவம் வேறு இவ்வுலக வாழ்க் கையில் கிடையாதென்பது நீர் அறிந்ததே. இப்படிப்பட்ட

இந்த விசேஷமான விவாகபந்தமானது உங்களுக்குள் ஒருவர் ஒருவரை உண்மையாக நேசித்து அன்பு பாராட்டி வந்தாலன்றி சாசுவிதமாய் வேரூன்றி நிலைகொள்ளாது. அப்பரிசுத்தமான பூரண அன்பே இல்லறவாழ்க்கைக்கு இன்றியமையாச் சாதனம், இப்படிப்பட்ட அன்பானது, நீர் பிறந்தபோதே உமது இருதயத்தில் ஓர் சிறு விதையைப்போலிருந்து கிளம்பிக் கிளம்பி தளிர்விட்டு உம்முடைய இருதய மண்டலமெங்கும் பரவி பிரவாகிக்கின்றது, ஆனால் எப்படி உலகத்தில் ஜனிக்கும் விருக்ஷங்கள் ஜனித்து இரண்டு மூன்று வருஷங்களாகிறவரையில் அவற்றின் வேர்கள் பெருத்து வலிவுள்ளதாகிப் பற்றிக்கொள்ளுகிறவரையில் ஜாக்கிரதையாகப் பாதுகாத்துவரல் வேண்டுமோ அதே மாதிரியாகவே உமது இருதய மண்டலத்தில் ஜனித்திருக்கும் அன்பென்னும் சிறிய கொடியையும் விருத்தியாகவளர்க்கும் விஷயத்திலும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும், ஏனென்றால், நீர் இப்போதுதான் விவாகம் செய்துகொண்டு அன்பு என்னும் கொடியைப் பயிர் செய்துக்கொண்டு இருப்பதால், இப்போது அந்த அன்பென்னும் பயிர் அழியாதிருக்கும்படி வெகு ஜாக்கிரதையாகவும், வெகு புத்தி சீலராயும் இருக்க வேண்டும். மேலும் அதிக உஷ்ணமும் அல்லது மிதமிஞ்சிய குளிர்ச்சியும் விருட்சங்களை அழித்துக் கெடுப்பதைப்போலவே மிதமிஞ்சிய காமம், சம்சார வாழ்க்கையைக் கெடுத்துவிடும். ஆகவே, எப்படி ஓர் விருக்ஷமானது எச்சரிக்கையாகக் காக்கப்படுவதனால் அது பூரணமாகவே வேரூன்றி, கொப்பும் கிளைகளால் பெருத்தபொழுது யாதொரு பயமற்று பிரகாசிக்கிறதோ, அப்படியே உமது உலக வாழ்க்கையின் பிரவேசிப்பிலேயே ஜாக்கிரதையாக நடந்து வழக்கமாக்கிக்கொண்டால், பிறகு உங்கள் இல்லற வாழ்க்கைக்கு, யாதொரு பயமும் இல்லை. ஆனதுபற்றி உங்கள் இருவருடைய உண்மையான சிநேக பந்தத்தினாலும் சத்திய பந்தத்தினாலும் பொறுமையினாலும், பின்னும் இத்யாதி ஜாக்கிரதைகளாலும் உங்களிருவருடைய அன்பு என்னும் கொடியும் நாளுக்குநாள் வேரூன்றி நிலைகொண்டு நல்லமலர் பூத்து நற்கனிகளை விளைவிக்கச் செய்யவேண்டும். இவ்விதமான

உங்களிருவருடைய அன்பின் பலனை, பரத கண்டத்தாராகிய நமது தேசத்தாரனைவரும் கண்டும் கேட்டும் தெளிந்தும், தாமும் பின்பற்றும்படிச் செய்யவேண்டும். இம்மட்டோ, உங்களுக்குள் இருக்கும் "அன்பு" என்னும் கொடியை இந்த இகலோக சுகத்தை மாத்திரம் சார்ந்ததாகவிராமல், பரலோகத்திலும் பிரகாசிக்கும்படி எப்போதும் பரிசுத்த எண்ணத்தினால் எழச்செய்ய வேண்டும்.

எனது அன்புள்ள உத்தம மாப்பிள்ளையே! நீர் பூரண கல்வி கற்ற நிபுணசிரோன்மணி. இப்படிப்பட்ட புத்திமான் எனது அருமையுள்ள குமாரத்திக்கு மணவாளனாக அமைந்ததற்கு யான் பெருமைகொள்வதன்றியில், இப்படிப்பட்டவர் எனது குமாரத்திக்கு வாய்க்கச்செய்த பரமேசுவாருக்கு நன்றியறிந்த வந்தனம் செலுத்த கடமைப் பட்டிருக்கிறேன். ஆனால் எனது குமாரத்தியாகிய ஸ்ரீமதி (பெயர்).........கண்மணிக்கு எம்மாலானகல்வி கேள்விகளைப்போதித்திருந்தபோதிலும் உமக்குத்தெரிந்திருக்கும் அவ்வளவு போதுமான கல்வியில்லை; ஆகவே இது விஷயத்தில் உம்முடைய படிப்புக்குத் தகுந்த, பாரியையென்று சொல்லப் பொருந்தாது. ஆனால் நீர் மகாப் பிரபல வித்தையும் புத்தியும் உள்ளவரானபடியால், உமது முயற்சியைக்கொண்டு எனது குமாரத்திக்கு வேண்டுமளவு கல்வி அறிவைப் போதித்து உமக்குத்தகுந்தபடிசெய்துகொள்ளலாம். இவ்வளவு வருத்தம் உமக்குக் கொடுக்கவேண்டியதெல்லாம் கூடி, நமது தேசத்தில் ஸ்திரீகளுக்குப் போதுமான உயர்தரப் படிப்பைப் போதிக்கும் சாதனம் ஏற்றபடி அமைத்திராததே: ஆகவே உம்முடைய பூரண அன்பினால்தான் எனது குமாரத்தி உத்தம பத்தினியாகவேண்டும் ஆகையால் இன்றுமுதல் நீர் இது விஷயத்தில் விடா முயற்சி செய்யவேண்டுகிறேன், ஏனெனில், இப்பொழுது விவாகம் செய்துகொண்ட மனைவியாகிய எனது குமாரத்தி, பிறர் பார்வைக்கு ஒரு பெரிய பெண்ணாக இருந்தாலும், பெற்றெடுத்து வளர்த்த என் பார்வைக்கு அவள் இன்றுதான் பிறந்து ஒன்றும் அறியாத குழந்தையாகத் தோன்றுகிறாள். ஆம் எனது அன்புக்

குகந்த கண்மணி; அவள்மேல் எனக்கிருக்கும் அன்பிற்கு அளவில்லை; அவளைப் பெற்றெடுத்து வளர்த்த எனக்கு எப்போதும் அருமையான கண்மணியாகிய குழந்தை விவாகம் செய்து கொண்டதினால் அவள் உம்முடைய கருத்தையும் கல்வியையும் அறியாமல் யாதாவது குறைவு குற்றம் செய்துவிட்டால், நீர் அவைகளைப் பொருட்செய்யாமல் பொறுத்து ஆட்கொள்ளவேண்டும். இந்த உலகத்தில் எந்த மதத்தைப் பார்த்தபோதிலும் "பொறுமையே" சர்வ சிரேஷ்ட மதமென்று சகலரும் கொண்டாடி வருவது உங்களுக்குத் தெரிந்த விஷயம். ஆம் க்ஷமை இல்லாவிடில் இல்லறம் நடக்கமாட்டாது. ஆகவே எனது குமாரத்தி யாதாகிலும் குறைவுகுற்றம் செய்துவிட்டால், உடனுக்குடனே சாந்தமாக அதைத் தெரியப்படுத்தி, பின்னும் அப்படிச் செய்யாதிருக்கப் போதிக்கவேண்டும். நமது தேசத்தில் ஓர் மணவாளன் தனது மனைவிக்கு நாயகனாக விருக்கவேண்டியதன்றியில் ஓர் உபாத்தியாயரைப் போலிருந்து இகபரத்துக்கு இன்றியமையாத தர்மங்களையும் போதிக்கவேண்டுமென்று முன்னோர் கட்டளையும் உண்டு—இத்தியாதி விஷயங்களுக்கு நீர் கல்விகற்ற உத்தம புருஷராக அமைந்தது எனது குமாரத்தியின் பாக்கியமே பாக்கியம். இத்தியாதி குறிப்புகளுடன் எனது அருமைக் கண்மணியை உங்கள்வசமாக்குகிறேன். ஆகவே எனது கண்மணிக்கு யாதொரு குறைவு நேரிடாதபடி காப்பாற்றவேண்டும். அந்த குழந்தைக்கு இனி நீர்தான் தந்தை; நீர் தான் குரு; நீர்தான் சகோதரர்; நீர்தான் நண்பர்; ஆம் சகலமும் நீங்கள்தான்; நீவிர் கல்விகற்றுத் தெளிந்து நிபுணசிரோன்மணியாகையால், விசேஷமாகச் சொல்லுதல் அனாவசியம். உங்களிருவருடைய பரிசுத்த கூட்டுறவினால் உற்றார் உறவினர் முதலானவர்கள் சுகித்து பரிசுத்தா ஆஸ்தீக மதத்தை பிரபலமாக்குவார்களாக! உங்களுக்கு பூரணதேகசுகமும் மனோசுகமும் பரமேசுவரர் ஆசீர்வதிப்பாராக! அவரது பரிசுத்தராச்சியம் உங்கள் வீட்டில் ஸ்தாபித்திருப்பதாக! உங்களுக்கு ஜனிக்கும் பிள்ளைகளுக்கு பூரண சுகமும் பரிசுத்த வாழ்க்கையும் கொடுத்து பல்லாண்டு பல்லாண்டாக பரிபாலிப்பாராக!

## மணமகளுக்குப் பிதா சொல்லும் விதம்.

நவமணிகளிலும் சிறந்த கண்மணியாகிய ஸ்ரீமதி (பெயர்) நான் உன்னை அருமையோடு பெற்றெடுத்து, நாளொரு வண்ண மும் தினமொருமேனியுமாக வளர்த்து, கல்வி, கேள்வி, செல்வம், சிறப்புகளினுல் விருத்தியாக்கி எனதுவீட்டை அலங்கரித்து ஆநந்த மடைந்திருந்தேன். ஆனுல் பெண்மக்களைப்பெற்று பெருமையை யடையும் ஒவ்வொருவரும், அந்தப் பெண்மக்களை வேறு புருஷ ருக்கு விவாகம்செய்து அனுப்பி, உலகப் பிரஜாவிருத்தி உண் டாக்க வேண்டுமென்பது பரமேசுவரருடைய பிரதிக்கினையாக விருக்கிறபடியால், அந்தப் பிரதிக்கினையை நிறைவேற்றக் கட மைப்பட்டு, இன்று எனது அருமைக் கண்மணியாகிய உன்னைவிட் டுப் பிரியுங்காலம் வந்தது. இரவும் பகலும் பாலூட்டி, தாலாட்டி சீராட்டி, கட்டித்தாவி முத்தமிட்டு வளர்த்த பேதையாகிய கோதையே! உன்னைப் பிரிந்து நானும், உனது தாயாரும் தங் கை, தம்பி, அண்ணன், தமக்கைமார்களும் எவ்விதம் மனம் துணிந்திருப்போம். இதுவரையில் நீ எனது செல்வப் புதல்வி யாக இருந்து, செருக்கில் சுதந்திரமாக இருந்தாய்; ஆனுல் இன்றுமுதலோ வெகு பொறுப்பும் உத்திரவாதமுமாகிய சுமை உன்மீது சுமத்தப்பட்டிருக்கிறது. இதுவரையில் உன்னைச் செல் வம் நிறைந்த சிறிய பெண்ணுகப் பாவித்து வளர்த்து வந்தேன். இப்போதோ, இல்லறத்தை நடத்தும் ஓர் மனையாளாக இருக் கிருய். இதுவரையில் நீ எனது வீட்டிவிருந்து செய்துவந்த பெரிய குற்றங்களையும் பாராட்டாமல், பெற்றெடுத்து வளர்த்த பிரியத்தினுல் பொருட் செய்யவில்லை. ஆனுல் இனிமேல் நீ செய்யும் ஒவ்வொரு அற்ப சொற்பமான சிறு குற்றத்தையும் பிர மாதமாகப் பாராட்டிக் குற்றப்படுத்துவார்கள். ஆகையால் நீ இது விஷயத்தில் அதிக ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். அப்படி நீ ஜாக்கிரதையாகவிராமல் இருப்பாயாகில், நீ இல்லறத் துக்கேற்ற மனைவியல்லவென்று சொல்வது மாத்திரமன்றியில், உன் னை அருமையோடு பெற்றெடுத்து வளர்த்த எனக்கும் உன் தாயாருக்கும், அவமானமுண்டாக்கி தீராவியாகூலத்துக்கு உட்

படவேண்டிவரும். அந்தோ! உனது நடக்கைகளினால் உனது பெற்றோர்களுடைய பெயருக்கும் எங்கே கெடுதிவந்து விடுகிற தோவென்று பயப்படுகிறோம், ஒருவேளை உனது நடவடிக்கை களைப் பற்றி உலகத்தார் என்னை எவ்விதமாகப் பாவித்தபோதி லும் பாதகமில்லை. ஆனால் இந்நில உலகைநீத்த மகாத்துமாக்களா கிய எனது மூதாதைகளுடைய பெயருக்கும், சாந்தம், சத்தியம் முதலானவைகளில் சிறந்த லக்ஷ்மியைப்போன்ற உனது தாயார் பெயருக்கும், எங்கே கெடுதிவந்துவிடுமோ என்ற திகில் என்னைத் தத்தளிக்கச் செய்கின்றது. மகாத்துமாக்களாகிய எனது மூத் தோர்களும் உனது பாட்டன் பாட்டி மார்களும், இந்த உலக வாழ்வைவிட்டுப் போய்விட்டபடியால், அவர்கள் உனக்கு சிபார் சாகப் பேசமாட்டார்கள். மேலும் உனது தாயார் மகா உத்தம ஸ்திரீயானபடியால் உனதுகெட்ட நடவடிக்கைகளைப்பற்றி பேசு வோரைக்கண்டிக்கப் புகாள்; ஆகவே நீ இதை மனதில் வைத்து ஜாக்கிரதையாக நடக்கவேண்டியதன்றியில், உனது நல்ல நட வடிக்கைகளினால் எனது மூத்தோர்களுடைய பெயரும் பிரகாசிக் கச்செய்து, உனது தாய் தந்தையர்களாகிய எமது பெயரும் பரி மளிக்கச் செய்யவேண்டும். நீ எனது வீட்டில் பெண்பிள்ளை யாகப் பிறந்தபோதிலும், உனக்கு வேண்டிய கல்விகேள்விகளின் விருத்திவிஷயத்திலும், தேக ஆரோக்கிய விஷயத்திலும் வெகு ஜாக்கிரதையாக உழைத்தோம். எனது உழைப்பிலும், உன் னுடைய தாயாருடைய உழைப்பும் கவலையும் அதிகம். ஆகை யால் அப்படிப்பட்ட உனது உத்தம தாயாருடைய பெயருக்குக் குறைவு குற்றங்களுண்டாகாதபடி, உனது தாயாருடைய புத்தி மதிகளையும் நடவடிக்கைகளையும் அருமைப் பிரமாணங்களாகக் கொண்டு வெகு ஜாக்கிரதையாக நடக்கவேண்டும். மேலும்— என் அருமைக் கண்மணியே, இல்லறத்தார்களுக்கு சிக்கனமே சிறந்தசெல்வம் என்று சொல்லப்படும். ஏனெனில், எந்த சம்சாரி வரவுக்கு மிஞ்சின செலவுசெய்து கடன் முதலானவைகளால் கஷ் டத்தைத் தேடுகிறாளோ அப்படிப்பட்டவருடைய வீடு சந்தோஷ மற்ற இல்லமாகும். அந்த வீட்டில் லக்ஷ்மிகரம் பாழ்த்துப்

போம். ஆகையால் இதை எப்போதும் மனதிற்கொண்டு, சிக்கனமாக வாழ்வதற்கு உன்னாலான முயற்சிகளனைத்தையும் செய்ய வேண்டும். மேலும் உன்னுடைய நாயகருடைய உத்கிருஷ்ட பந்துக்களாகிய மாமன், மாமி, நாத்தி முதலானவர்களிடம் அதிக மரியாதையாகவும் அடங்கி ஒடுங்கி அசட்டைசெய்யாமல் கவுரவிக்கவேண்டும். மேலும் நமது தேசத்தில் சில வீடுகளில் மாமி மாமன் நாத்தி முதலானவர்களின் கொடுமை யதிகம். ஆனபடியால் உனக்கும் அவ்விதமான கொடுமையும் கஷ்டமும்சம்பவித்து அதனால் உனக்கு சஞ்சலமும் உனது நாயகருக்கு சங்கடமும உங்களுக்கு ஜனிக்கும் மக்களுக்கு வியாதியும், பலஹீனமும் சம்பவித்துவிடுமோவென்று எமது மனம் கலங்கித் துடிக்கின்றது ஆகையினால் உனது நடவடிக்கைகளினால் உனது மாமனார், மாமியார் நாத்திகள் முதலானவர்கள் உன்னை வியந்து தங்கள்வயிற்றில் ஜனித்த மருமகளாகிய திருமகளாகப்பாவித்து நேசித்து வாழும்படி செய்துகொள்ளவேண்டும். அன்றியும், உனது நாயகருடைய இதர பந்துக்களிடத்திலும் சினேகிதர்களிடத்திலும் அன்பாக இருந்து உனது வீட்டு வேலைக்காரரிடத்திலும், அல்லது வீட்டை அடைக்கல ஸ்தானமாகக் கொண்டிருப்பவர்களிடத்திலும் சாந்தமாக இருந்து, சவரட்சணை செய்து, சகலரிடத்திலும் மரியாதையாக இருக்கவேண்டும். மேலும் நீ சுகமாக வாழும்போது அநேக ஏழை பந்துக்களும் சுற்றத்தாரும் வருவார்கள். அவர்களை அசட்டை செய்யாமல் ஏழைகளை ஆதரிக்க வேண்டும். கடைசியாக நீ சுகத்திலும் துக்கத்திலும் உனது நாயகருடைய உண்மையான தோழியாகவிருந்து இல்லறத்தை நடத்தவேண்டும. ஓ கண்மணியே, இனிஎன்ன சொல்வேன். நீ எனது இருதயத்துக்கு உகந்தவள். உன்னைவிட்டுப் பிரிவதென்றால் எனது இருதயத்தை விட்டுப்பிரிவது போலிருக்கிறது. உலகத்தில் சிலர் தம் மக்களுக்கு நல்ல நாயகர் வாய்த்து விவாகம் முடிந்துவிட்டால், அத்துடன் தமது மக்களின் மேலிருக்கும் அன்பைக்குறைத்து விடுவதாகச் சொல்லுவார்கள். ஆனால் எனது கொள்கையோ அப்படிப்பட்டதல்ல, நீ உனது நாயகர் வீட்டுக்

குப்போன போதிலும் உன்னை மறக்கமாட்டேன். இன்னும் என்னால் உனக்கு ஆகவேண்டிய காரியங்களை யெல்லாம் செய்து தர சித்தமாகவிருக்கின்றேன். ஆகவே என் அருமைக்குழந்தாய் அழவேண்டாம். சந்தோஷமாக உனது நாயகர் வீட்டுக்குப்போய் பல்லாண்டு பல்லாண்டாக பலசுகிர்தங்களைப்பெற்று வாழ்வாயாக.

## ஜாதகர்மம் அல்லது ஜன்மோற்சவம்.

1. குழந்தையின் ஜெனன சுபதினத்தைத் திருநாளாக எண்ணி, நன்றியறிந்த சந்தோஷத்துடன் கொண்டாடவேண்டும். ஏனெனில் குழந்தையின் ஜனனமானது அழிவற்ற ஆத்மாவின் வருகையாகவும், அஞ்ஞானத்தில் அவதிப்படும் அண்டத்தாருக்கு மெய்ஞ்ஞானத்தையூட்டி ஆதரிக்க வந்த நூதன வீரர் சேர்க்கையாகவும் பரமேசுவராருடைய பரிசுத்த தொழிலைச்செய்யும் தாசனாகவுமிருப்பதால், பெற்றோருக்குத் தாம் பெற்ற பிள்ளை பிரகாசமுள்ள ஓர் ஜோதியாகத்தோன்றி அவர்கள் இருதயத்தை சந்தோஷிப்பிக்கச் செய்கின்றது. குழந்தையின் பரிசுத்தமான முகத்தில் பரமேசுவராருடைய பூரண பிரகாசமும் சாயையும் குடிகொண்டிருப்பதால், அந்த சிசுவானது குற்றமற்ற தேவதூதனைப் போலிருக்கிறது. ஆகையால் ஜனித்த சிசுவுக்காக வந்தனை வழிபாடுடன் பரமேசுவரரை நன்றியறிதலோடு துதிசெய்யவேண்டும்.

2. குழந்தை பிறந்தபின் அதை நன்றாய்க்கழுவி கந்தம்கமழச்செய்து பரிசுத்தமான வெண்மைத் துணியைத் தரிப்பித்து பிறகு அதன் தாய்க்குக் காட்டவேண்டும்.

3. அத்தாயானவள் முக மகிழ்ச்சியோடு பார்த்து பிரேமையுடன் முத்தமிட்டு கடவுளைப் பிரார்த்திக்க வேண்டும்.

4. ஓ பரமேசுவரா! அடியாள்மீது அன்புவைத்து அருளிய கருணையால் ஜனித்த இக்குழந்தையின் முகத்தைப் பார்க்கும் பாக்கியம் பெற்றேன். இந்த நூதன வரப்பிரசாதத்துக்காக நின்னை வணங்கி வந்தனம் செய்கின்றேன். ஓ அருள் நிறைந்த அப்பனே! இந்தக் குழந்தையை ஆசீர்வதித்து ஆதரிப்பீராக.

பிறகு பிதாவானவர் அவ்வண்ணம் பிரார்த்திக்க வேண்டும். பந்துக்கள் முதலானவர்களும் பிரார்த்திக்க வேண்டும்.

பெற்ற தாயை அதிஜாக்கிரதையோடு கவனித்து வந்து அவள் உடம்பு ஆரோக்கிய மடைந்தபின், வீட்டை சுண்ணாம்புமுதலியவைகளால் சுத்திசெய்து மா, வாழை, கமுகு முதலியவைகளால் அலங்கரித்து, பெரியோர்களையும் பந்துமித்திராதிகளையும் அழைப்பித்து, அவர்களை ஆசனங்களில் அமரவைத்து, பிள்ளையின் பிதா அவர்கள் முன்னிலையில்நின்று கடவுளைப் பிரார்த்திக்க வேண்டும் முறை

மகிமையுள்ள ஓ! மங்கள நிகேதனனே! இந்தக் குழந்தையானது தனது தாயின் வயிற்றில் அணுதாவாக விருந்து, அநேக அபாயங்களுக்கும், வியாதிகளுக்கும் தப்பி சுகமாகவிருக்கும்படி போஷித்து பாதுகாத்ததற்கு, எனது கருத்தும் கரமுங் கூப்பி வந்தனம் செய்கின்றனன்—ஓ! அப்பனே! அந்தகாரமும் தனிமையுமான தாயின் வயிற்றில், இந்தக் குழந்தைக்கு கை, கால், கண், மூக்கு, செவி, வாய் முதலான கருவிகளை, அற்புதமான, சிற்பியைப்போலிருந்து அமைத்தும், பக்குவமான பருவம்வந்த போது, பிரபஞ்சத்தில் வந்து, நினது பரிசுத்தமான ஊழியஞ் செய்து உனது மக்களுக்கு உதவி செய்யும்படி ஜனிப்பித்ததற்கு

உள்ளம் அறிய வந்தனம் செய்கின்றனன்—இந்த நூதனப்பிள்ளைப் பேறு, அடியேனிடத்தில் நினக்கிருக்கும் பூரண அன்பை பிரத்தியக்ஷப் படுத்துகின்றபடியால், இந்த பெரும் பாக்கியத்தை பிரசாதித்தருளிய, நினது குறைவற்ற கருணையைத்துதித்துக் கொண்டாடுகின்றனன். ஓ, அகில விநோதா! அடியேனுக்குப் பூரண பிரியத்தோடு பிரசாதித்தருளிய இந்தப் புத்திர பாக்கியத்தைப் பக்குவமறிந்து போஷித்துப் பாதுகாக்கவேண்டிய கடமையைச் சரியாகச்செய்ய வரமீவாய். அடியேன் கேவலம் அசக்தனும் அபூரணனுமென்று, அறிந்திருப்பதால், இந்தக் குழந்தையைப் பக்குவ மறிந்து போஷித்து பாதுகாத்து, நினது உண்மையான, ஊழியனாகச் செய்யும் மேலான பெற்றோர் கடமையையும், உத்திரவாதத்தையும் எவ்விதம் நிறைவேற்றுவேன்?

நினது உதவியின்றி இந்தப் பொறுப்பான காரியத்தை நிறைவேற்றுதல் அசாத்தியமன்றோ? ஆகவே, இந்தப் பெருமை பெற்ற பெற்றோர் கடமைக்கு இன்றியமையாத உண்மையும், உறுதியும், ஊக்கமும், விஸ்வாசமும், வல்லமையும், புத்திரவாத்ஸல்லியமும் பெற்றிருக்க, நீயே எனது போதகனாக இருந்து அறிவிப்பாய்,—ஓ ஈசனே, இந்தக் குழந்தையை ஆசீர்வதித்து இதற்கு நீயே நிரந்தரமான பரம தந்தையாகவும், தாயாகவும் நண்பனாகவுமிருந்து, துன்பங்கள் அணுகாமல் ஆதரிப்பாய்—இல்லறத்தாரோடு இன்பமாக வாழும் எனது வீட்டுக் குலதெய்வமே, இந்த குழந்தையின் ஜென்மத்தால் இதைப் பெற்றோருக்கும், மற்ற குடும்பத்தாருக்கும், சந்தோஷத்தையும், சாஸ்வதமான சுக வாழ்வையும் உண்டாகும்படி ஆசீர்வதிப்பாய், ஓம், தத்சத், அவ்வண்ணம் ஆகக் கடவது. பிறகு, பெரியோர்கள், மங்கள வாழ்த்துதல்களை, சொல்லியபின் அருகிலிருப்போரனைவரும், சாந்தி! சாந்தி! சாந்தி! ஹரி ஓம் என்று சொல்லவேண்டியது. பிறகு, கீதங்களைப்பாடி, வந்தவர்களுக்கு, விருந்துகள் செய்து, தர்மதானங்களைச் செய்து ஏழைகளைச் சந்தோஷிக்கச் செய்யவேண்டியது. குழந்தைக்கு வெகுமானங்கள் ஈயலாம்.

## நாமகரணம் அல்லது பெயரிடும் விழா

குழந்தை பிறந்த ஆறுமாதத்திற்குள், நாமகரணம் (பெயரிடும் உற்சவம்) செய்யவேண்டும். ஓர் நல்ல முகூர்த்தத்தில் குழந்தையைப் பெற்ற பிதாவானவர், குழந்தையைக் கரத்திலேந்திக்கொண்டு வந்து, பந்துமித்திரர், பாகவதர்கள் சூழ்ந்திருக்கும் வேதிகையினிடமாக நின்று, பின் வருகிறபடி பிரார்த்தனை செய்யல்வேண்டும். எப்படி என்றால்.

எனது வீட்டுத் தெய்வமாகவும், இஷ்ட தெய்வமாகவும், நம்பி பக்தியோடு பணிந்து கொண்டாடும், அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகனே! நினது திவ்விய சந்நிதானத்தில், எனது அருமையான இந்தக் குழந்தையை ஸமர்ப்பிக்கிறேன். ஓ மகிமையுள்ள பிதாவே, அனுதரவான இந்தச் சிசுவை உலகத்தின் கொடிய அபாயங்களினின்று விலக்கிக் காப்பாற்றிவந்த தன்றியில், நீயே இதற்கு அன்பில் சிறந்த அன்னைபோல் வாரியெடுத்து பாலூட்டி சீராட்டி நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியாய் போஷித்தும், பாதுகாத்து வந்தமையால் இந்த சிசுவானது, தினத்துக்கு தினம் பல்கிபெருகி பிரபஞ்சத்தாரில் ஓர்பிரஜையாகவும், எனது குடும்பத்துக்கு ஓர் அங்கமாகவும், இருக்க பிரவர்த்திக்கின்றது. இனி இந்தச் சிசுவானது கேவலமான பாலை மாத்திரம் உண்டு உய்யாமல், பலந்தரும்படியான போஜனத்தை உட்கொள்ளவும், அந்த போஜன போஷணையினால் பெரியதாகி அதற்கு இன்னபெயர் என்று உலகத்தார் அறிந்து அழைக்கும்படி நாமகரணமாகிய பெயரை இட்டுக்கொள்ளவும், இதோ நினது திவ்ய சந்நிதானத்தில் வந்திருக்கிறது. இத்தன்மையாகச் செய்த

நினது மகிமாபிரதாபங்களுக்கெல்லாம் எனது இருதய பூர்வகமான வந்தனம் செய்யவும், இந்தக் குழந்தையை நின் திருப்பாத கமலத்தில் அற்பிதஞ்செய்யவும் அனுக அனுக்ரகிப்பாய்—ஓ கருணாநிதியே! இந்தக் குழந்தை யை ஆசீர்வதித்தும், இதற்குப் பொருத்தமான ஒரு பெயரிட்டும், இன்றோடு இதுவும் என் குடும்பத்தில் ஓர் பிரஜையாக பிரவர்த்திக்கவும் அருள் புரிவாய்—மேலும் இந்தச் சிசுவானது சிற்றின்பமானதும் சிலநாளிருந்து சீக்கிரத்தில் அழியக்கூடியதுமான இந்த உலகப் பற்றுக் களில் விருத்தியாகும் போதே, பேரின்பமும், பெருமை பெற்றதுமான பரலோக சஞ்சரிப்புக்கேற்ற மெய் ஞானத்தை விருத்தியாக்கிக் கொள்ள அருள்புரிவாய். ஓ அகில விநோதா! இந்த அருமையான சிசுவானது உனது மனதுக்கு உகந்த உத்தம புத்திரனாகவும் நினது பிரதாபத்தைப் பெருமைப்படுத்தத் தக்க பரம பாகவத னாகவும் இருக்கப் போதித்து பழக்கி வைக்க எமக்குப் பலத்தைக்கொடுப்பாயாக. இந்தக் குழந்தையினால் பெற்றோர்களாகிய எமக்கு பூரணசுக சந்தோஷ வாழ் வைக் கொடுப்பதன்றியில் எமது குடும்பத்துக்கே ஓர் ஆபரணமாக விருந்து பிரகாசிக்க, அருள் புரிவாய்—ஓ சர்வலோக சரண்யனே! எமது அருமையான இந்தக் குழந்தையைக் கைவிடாமல் அதின் அருகே இருந்து நினது பரிசுத்தமான மகிமையும், பெயரும், பல்லாண்டு பல்லாண்டாக, பிரகாசிப்பதாக! என்று பிரார்த்திக்க.

பிறகு குழந்தையை பெரியார் கையில் கொடுத்து, நாமகரணம் செய்வித்தல் வேண்டும். அப்படி நாமகர ணம் செய்விப்பதற்கு முன் அந்தக் குழந்தையின் தந்தை வருக்கத்திலாகிலும், தாய் வருக்கத்திலாகிலும், அல்லது அவர்கள் முன் சந்ததியார் தரித்துக்கொண்டிருந்த

யாதாவது ஒரு நல்ல பெயரையாகிலும், அல்லது மனோ ரம்மியமான வேறெந்தப் பெயரையாகிலும் தெரிந் தெடுத்து, ஆசாரியருக்குச் சொல்லிவைத்தல் வேண்டும். அதன்மேல் ஆசாரியார் அடியிற்கண்டவிதமாக அந்தப் பெயர், இடவேண்டும். எப்படியெனில்:—

சர்வ, வல்லமையுள்ள பரமேச்வரருக்கு முன்பாக வும், சமரச வேத சன்மார்க்க சபையிலுள்ள பாகவதர் கள் முன்பாகவும், இந்தக் குழந்தைக்கு ஸ்ரீமான்........... ...................அல்லது ஸ்ரீமதி...............என்னும் பெய ரிடுகிறேன். பூர்ணனந்த மயமான பரமேசுவரர் இந்தக் குழந்தையை சகல சுகபோகங்களைப் பெற்று வாழ ஆசீர்வதிப்பாராக ! என்று சொல்லவேண்டும்,

பிறகு சுகந்தமலர்களால் தொடுக்கப்பட்ட புஷ்ப மாலையை, குழந்தையின் கழுத்தில் தரிப்பித்து பிரிய மான ஸ்ரீமான்...............அல்லது ஸ்ரீமதி.................... புருஷோத்தமராகிய பரமேசுவரருடைய பெயரால் ஆசீர் வதிக்கிறேன். நீ சுகத்துடன் சிரஞ்சீவியாய் வாழ்வா யாக என்று முத்தமிட்டு ஆசீர்வதிக்க வேண்டும். அநந் தரம் அருகிலிருக்கும் பந்துமித்திரர் அடியார்களனை வரும் சாந்தி! சாந்தி!! சாந்தி!!! ஹரி ஓம் என்று சொல்ல வேண்டியது. பிறகு வாழ்த்துதல்களையும் சமயத்துக் கேற்ற கீதங்களையும் பாடவேண்டும்.

பிறகு, குழந்தையைக் கொண்டுவந்து சற்றுஉயர்ந்த ஆசனத்தில் வீற்றிருக்கச் செய்து, அதற்குமுன் சுத்தி யும் அழகுமான பாத்திரங்களில் சாதம், காய்கறி, மிட் டாய், கனிவர்க்கங்களைப் பரப்பிவைத்தல் வேண்டும்.

இந்தப் பாத்திரங்களிலிருக்கும், பதார்த்தங்களில் முதலில் குழந்தையைப்பெற்ற தாயார் கொஞ்சம் சாதத்

தை யெடுத்து இந்த உணவால் பரம சுகத்தைப் பரமேசு வரர் உனக்கு அருள் செய்வாராக! என்று சொல்லி ஊட்டல்வேண்டும்.

இவ்விதமாகக் குழந்தையின் தாயார் செய்த பிறகு நெருங்கிய பந்துக்களும், உத்தம பெரிய ஸ்திரீகளும், அதேமாதிரியாக வாழ்த்தி சாதத்தையும் காய்கறியை யும் ஊட்டல் வேண்டும்.

இவ்விதமாக குழந்தை இந்தப் பதார்த்தங்களை உண் ணும்போது, பெண்கள் சுபசோபனப் பாட்டுகளை பாட வேண்டும். அப்போது வீட்டிற்கு முன்கட்டில் மங்கள வாத்தியங்களை முழங்கவேண்டும்.

அப்போது, இஷ்ட பந்துக்கள் தத்தம் சக்திக்குத் தகுந்த வெகுமானங்களைக் கொடுத்து குழந்தையை வாழ்த்தி முத்தமிட்டு ஆசீர்வதித்தல் வேண்டும். பிறகு தர்மதானங்கள்செய்து, தாம்பூலம் வழங்கி விருந்துகள் செய்யவும்.

## அசுபம்.

### பொது விதிகள்.

1. இறந்தவருக்காகத் துக்கிப்பது இயற்கையான தாயிருக்கவேண்டும்.

2. தன்னியல்பாய் உண்டாகும் துக்கத்தை அடக் குவது கெடுதி. போலித் துக்கத்தைப் பூண்பது அடாத செயலாகும். அன்பின் பெருக்காலும் பிரிவாற்றுமையா லும் உண்டாகும் துயரம், ஆடி அமையும்படி விடுவதே உத்தமம்.

3. கூலிக்கு மாரடித்து அழும் கூத்தாடிச்சிகளை யும் போலி துக்கக்காரரையும் சேர்க்கக்கூடாது.

4. ஈசுவரன் ஆளுகையில் ஒவ்வொரு நிகழ்ச்சியும் நன்மைக்கே உண்டாவதால், இவ்வித துயரம் மானிடர் உயர்வுக்கும் நற்பதவிக்குமே பயன்படுகிறது.

5. மரணமென்பது ஒன்றில்லாவிடில் உலகவாழ்வு அநித்தியமென்பதை உணரோம்—இவ்வுலகத்தின் அற்ப சுகமாகிய போகபாக்கியங்களை வெளிமயக்குகளென்றுண ரோம்—சாசுவித ஆனந்தத்தை நாடோம். சத்தியத்தை உணரச்செய்வது இத்துக்கசம்பவமே.

6. துக்கம் கொண்டாடும் காலம் இறந்ததுமுதல் பத்து நாள்களுக்கு அதிகப்படத் தேவையில்லை. அவ சியம் ஏற்பட்டால் நீடித்து வைக்கலாம்.

7. தீட்டுக்கொண்டாடும் விஷயத்தில் தேகத்தை வாட்டி அபரிமித சிரமத்திற்கு இடந்தரலாகாது.

8. தீட்டுக்காலத்தில் உடையும் உணவும் வெகு சாதாரணமாயிருக்கவேண்டும். ஆடல் பாடல்கள் கூடா.

## மரணம்.

1. அழிவற்ற ஆத்துமா இம்மண்ணுலகை விட் டேகும் மரணகாலமானது பயபக்தியையும் பரலோக சிந்தையையும் தரத்தக்க சமயம்.

2. திருநாட்டுக் கேகுஞ் சமயம் நெருங்கியிருக் கையில், உலக சொத்துக்கள் விஷயத்தில் செய்யவேண் டிய ஏற்பாடுகளைச் சீராய்செய்துவிட்டும், தன்னைச் சூழ்ந் திருப்பவர்களாகிய மனைவி மக்களுக்கு சொல்லவேண்டிய புத்தி மதிகளைச் சொல்லிவிட்டும், ஆசீர்வாதம் பெற

வேண்டியவர்களிடம் பெற்றும், செய்யவேண்டியவர்களுக்குச் செய்தும், யாவரிடத்தும் விடைபெற்றுக் கொண்டு, உலகப் பற்றுக்களை யெல்லாம் விட்டவனாய் சலனமற்ற மனதுடன் தியானத்திலிருந்துகொண்டு, சாசுவிதாநந்த பதவியை எதிர்நோக்கி இருக்கவேண்டும்.

3. பெரியோர்களும் மற்றுமுள்ள எல்லோரும், சரீரத்தை விடப்போகும் ஆத்மா அனுதாபப்பட்டு பக்தியினால் மூழ்கி ஆறுதலைபெற்று, பரலோக சிந்தை மேலிடும்படி செய்யத்தக்க நூல்களையும் கீதங்களையும் பிரார்த்தனைகளும் இடைவிடாமல் செய்துகொண்டிருக்க வேண்டும். இறப்பவரின் மனமானது சலனப்படாமலிருக்கும்படி அழுகையும் புலம்பலுமில்லாமல் எல்லோரும் சமாதானத்தோடு கூடியிருக்கவேண்டும். அச்சமயத்தில் ஆநந்த பதவியை நோக்கியிருக்கும் ஆன்மா, கடவுள் தன்னருகிலிருக்கிறாரென்றும் நித்திய சூரிகள் தன்னைக் கைகூப்பி அழைக்கிறது போன்ற நினைப்பில் அழுந்தியிருந்து கண்களை மூடிக்கொண்டு கடவுளைப் பிரார்த்திக்கவேண்டும். எவ்வாறெனில்:—

"ஓ ஆபத் பாந்தவா, அநாதரக்ஷகா, கருணைமூர்த்தியே, என்னப்பனே, எல்லாம் முடிந்தது. ஊக்கம் குறைந்து. புலன்கள் மழுங்கிப்போகின்றன; நினது திருவடி நிழலில் சாசுவித ஆனந்தத்தை அருள்வாயாக. என் கோரிக்கை யெல்லாம், எனது அன்னையும் அப்பனும் அன்பனுமாகிய உனது மங்கள சாந்நித்தியமே யன்றி வேறில்லை".

4. பிராணன் நீங்கிவிட்டபின், பிரேதத்தை நீராட்டி, பரிமளவாசனை யூட்டி, தலைமயிர் கோதி, சுத்தவெள்ளை வஸ்திரத்தால் முகம்தவிர மூடி, வேறொரு ஆஸனத்திலிருத்தி, மலர்மாலைசூட்டி, பன்னீர்தெளித்து

முக்கியஸ்தர்கள் சூழ, கடவுள் பிரார்த்தனை செய்ய வேண்டும்.

இராஜாதி ராஜாக்களையும் பிரபஞ்சத்தையு மாக்குகின்ற நித்திய நிர்மல ஆநந்த ரூபனே; அற்பர்களாகிய நாங்கள் துக்கத்தில் மூழ்கினவர்களாய் உன்னை அணுகி துதி செலுத்துகிறோம். எங்கள் அரிய பிரியமுள்ள..........ருடைய மரணத்தால், சொல்லி முடியாத துயரத்திற்குள்ளானோம். ஓ கருணாகர பரிபூரணனே! துக்கமுற்று, கதியற்றதீனர்களாகிய எங்களை கடைக்கணிப்பாய்! எங்களுக்கு எழுச்சியையும், ஊக்கத்தையும் தந்து உன் திருவுளப் பாங்கின்படி யாவும் நடக்குமென்றெண்ணி மனோ தைரியத்தைக் கொள்ள அருள் புரிவாய். இவ்வுலகில் உன்னைத்தவிர மற்றவையெல்லாம் அநித்தியமென்று உள்ளூற உணர்ந்து, இம்மையிலும் மறுமையிலும் எமக்கு "எல்லாம்நீயே" யென்று உன்னைச் சரணடையும்படி எங்களுக்கு அறிவூட்டுவாய். இப்பிரபஞ்சப் பற்றுக்களை நீக்கி, தொல்லைகளையும் கவலைகளையும் துறந்து, உனது சந்நிதானத்திற்கு வந்த எமது...........உனது சந்நிதியின் பேரருளால் பரிசுத்தமடைந்து, பக்தியிலோங்கி வளர்ந்து, உன்னில் சாசுவித ஆநந்தத்தை அநுபவிக்கும்படி கடாக்ஷிப்பாய்.

எல்லோரும் "சாந்தி உண்டாகக்கடவது" என்று சொல்லவேண்டும்.

5. பிறகு பிரேதத்தை பாடைமீதேற்றி துக்கக் குறியான பாடல்களைமட்டும் பாடிக்கொண்டு, மயானம் சென்று சந்தனக்குச்சிகளால் கொள்ளியிடும்போது செய்யவேண்டிய பிரார்த்தனை. தப்புத் தாரைகளை விலக்கல் உத்தமம்.

"நினது திருநாமத்தினால் இப்பரிசுத்தமான தீயிடுகிறேன். அழியத்தக்கது அழிந்து பஸ்பமாய்விடும். இச்சரீரத்தை விட்டு வந்த ஆத்துமாவை நினது சந்நிதியில் வைத்து ஆசீர்வதிப்பாய்"

பிறகு பெரியோர்கள் "மனிதவாழ்வு பொய்" என்பதைப்பற்றி உபந்நியாசம்செய்யலாம். இப்பாடலைப்பாடி முடிக்கவேண்டும்.

### சாயுச்சியச் சங்கற்பா.

எண்சீர் விருத்தம்.

அண்டமெலாம் படைத்தளித்தே அன்பாற் பின்னர்
அவைதம்மை ஒழித்தருளும் அத்தா! அப்பா!
கண்டுணரா வணமெங்கும் கரந்து நிற்கும்
கருணைநிறை பெம்மானே! காக்கும் ஈசா!
* தொண்டனிவன் புவிநீத்துத் தூய வுன்றன்
தொல்கழலே நாடினனால் சூழவின்னே
அண்டிநின கழலடைய அன்பு கொண்டே
அழைத்தருள்வாய் ஆன்மசுகம் அடைய நன்றே.

* "தொண்டனிவள் புவிநீத்துத் தூயவுன்றன்
தொல்கழலே நாடினளால் சூழவின்னள்"
எனப்பெண்பாலாக இருந்தாற் பாடுக.

### இரண்டாம் நாள்.

1. பிரேததகனம் செய்த மறுநாள், கருமத்துக் குடையவர்கள், மயானத்திற்குப் போய் தகனம்செய்த காட்டை சுத்த ஜலத்தால் ஆற்றி பயபக்தியோடு ஈசுவர நாமம் உச்சாரணம் செய்துகொண்டு அஸ்திகளைப் பொருக்கி, சுத்தஜலம் அல்லது பாலால் சுத்திசெய்து ஓர் புது மண்பானை அல்லது ஜாடியில் வைத்து "அப்பனே நீ தந்த சரீரம் உன்னிடமே சேர்ந்தது" என்று பிரார்த்தித்து நதியிலாவது பெரிய தடாகத்திலாவது விட்டு விடலாம். அல்லது ஓர் குழியில் புதைத்து விடலாம். அதன்மேல் ஓர் சமாதி கட்டி சிலா சாசனமும் பதிக்கச் செய்யலாம். அக்காலத்தில் செய்ய வேண்டிய பிரார்த்தனை:—

"பரம தந்தையே! நினது கட்டளையின்படி எம்மைவிட்டு நீங்கினவரின் அஸ்தியை அருமை பாராட்டும் ஞாபகச் சின்னமாக ஈண்டு அடக்கம் செய் திருக்கிறோம். நீர் இதை ஆசீர்வதிப்பீராக. உமது

நித்திய மங்கள பரமபதத்தையடைந்த........................ ஆத்மாவுக்கும், இங்கிருப்பவர்களாகிய பந்து மித்திரர் யாவருக்கும் சாந்தியைத் தந்தருளுவாய்; என்று பிரார்த்தித்து எல்லோரும் நீராடி வீட்டுக்கு திரும்பிச் செல்ல வேண்டும்.

2. பத்து தினங்கள் தீட்டுக்காத்தல் போதுமானது.

3. மரணம் நேர்ந்த வீட்டை சுண்ணும்பு முதலியவை பூசி, சுத்தி செய்து வைப்பது அவசியமாகும்.

## பத்து நாளும் கடந்த மறுநாள்.

11-ம் நாள் சிரார்த்தம் செய்யும்போது கருமத்துக்குடைய மூத்தோர் இளையவர்களை தன்பக்கத்தில் வைத்துக்கொண்டு கடவுளைப் பிரார்த்தனை செய்யு முறை.

சிரார்த்தம் என்றல் இறந்தவர்களுக்கு சிரத்தையோடு செய்யும் காரியம் என்பது பொருள்.

" அப்பனே ! நீ தந்தது நின்னிடமே சேர்ந்தது. எங்களில் பூஜிக்கப்படத்தக்கதும், எங்களுக்காக வருந்தி உழைத்த வருமான பிதா இறந்ததால், தகப்பனற்ற பிள்ளைகளாகிறோம். அவர் போனவிடம் எங்களுக்குத் தெரியவில்லை. யாருங்காணுத அதிசயமான அந்தவிடத்துக்குப் போனவர்கள், மீண்டதுமில்லை ஆனுல், இந்த உலகத்துன்பங்களை விட்டொழித்த எமது தந்தை வேறோரிடத்திற்கு போனதாய் மாத்திரம் எங்களுக்குத் தெரிகிறது. ஓ பரம பிதாவே! அவரை நினது திருப்பாத கமலத்தில் சேர்த்து பரிசுத்தத்தையும் சாசுவித ஆனந்தத்தையும் தந்தருள்வாய். அவர் உமது கடாக்ஷ வீக்ஷண்யத்திலிருந்து, உமது தயாள அமிர்தத்தை அருந்தி, ஆனந்த சாகரத்தில மூழ்கியிருக்கும்படி அருள் புரிவாய். இந்த உலக கஷ்டங்களிலும் அபாயங்களிலும் எமக்கு நற்றுணையும் கொழுகொம்புமாயிருந்து, எங்க

ளைக் காப்பாற்றி வந்த எமது தந்தையின் மரணத்தால் நாங்கள் எவ்வளவு நிர்பாக்கியர்களானோமென்பது உமக்குத் தெரிந்த விஷயம். நீயே கதியற்றவர்களுக்குக் கதியாயும் தந்தையற்றவர்களுக்குத் தந்தையாயுமிருப்பதினால் எமது துக்கத்தில் உம்மைச் சரணமடைந்தோம். வருத்தமுற்ற எங்களுக்கு ஆறுதலையும் சாந்தியையும் தந்தருள்வாய்; துன்புற்றவர்களுக்கு ஆறுதலும் நீயே, அவர்கள் நலமெல்லாம் நீயே.

இவ்வநித்திய வாழ்க்கையைப்பற்றிய ஆசாபாசங்களினின்றும் எம்மை விலக்கி, நித்திய பதவியின் அழியாச்சுகங்களைப் பற்றும்படி அருள்புரிவாய். எங்களைவிட்டு நீங்கிய யாவரும் உம்முடைய சந்நிதியைச் சார்ந்திருப்பதாகவும், எங்கள் காலம் முடிவு பெற்றவுடன் நாங்களும் நித்தியசூரிகளுடன் உமது சந்நிதானத்தில் இடம் பெறுவோமென்கிற கோரிக்கையை எங்களுக்குப் பிரசாதித்து எங்களைத் தேற்றுவாயாக!

எங்களுடைய வாழ்நாள் மேம்பாடுடையதாகி உனது மகத்துவம்பெற்ற சந்நிதானத்துக்கு நாங்கள் அருகராகும்படி கிருபை செய்வாய்! ஓ சாசுவிதானந்த பிரபுவே! சர்வ சாம்பிராச்சிய பிரபுத்துவம் நின்னுடையதாவதாக; ஓம் தத்சத்.

சிரார்த்தம் செய்பவன் பிறகு மேற்கண்ட பாடலைப்பாடி பின்வருமாறு பிரார்த்திக்கக் கடவன்.

## தந்தை விஷயம்.

ஓ என் அன்புள்ள பிதாவே! அடியேனை அன்போடு பெற்றெடுத்து தாலாட்டி, சீராட்டி, உச்சிமோந்து நாளொரு வண்ணமாகவும் பொழுதொரு மேனியாகவும் வளர்த்து, கல்வியறிவையூட்டி இனிமையான இல்லறத்தைத் தழுவச்செய்தும், என்னை உலகத்தார் ஓர் மனிதனாக மதிக்கச்செய்து வாழ்விக்க வைத்த பேருபகாரத்தையும், பெருங் கருணையும் கருதி எனது இருதய

பூர்வகமான நன்றியறிந்த வந்தனத்துடன் இன்று எனது சிரத்தையைக் காட்ட வரமளிக்க வேண்டு கின்றனன். தயவான குணமே உருவாக வந்த எனது தந்தையே! தாங்கள் எனக்காகப் பட்ட கஷ்டத்தை என்னென்று எடுத்துக் காட்டக் கூடும்? அடியேனது சுகத்திலும் துக்கத்திலும், தாங்கள் எனக்காக எடுத்துக் கொண்ட சிரமத்திற்கு எத்தனையோ கோடி வருஷங்கள் வரையில் நன்றி யறிந்த வந்தனஞ் செய்த போதிலும் தீராதே? எனக்காக தங்களுடைய சொந்த சுகங்களை யும் விட்டொழித்தும், உலகத்தாருடைய தூஷணைகளுக் கெல்லாம் உட்பட்டும், மேலும் நான் அறியாமையாலும் பாவிய இயற்கையினாலும் சோம்பலினாலும் முரட்டுத் தனத்தினாலும் தங்களுக்கு அடிக்கடி பலவித வருத்தங் களை யுண்டாக்கியும், அவைகளை யெல்லாம் பொருட் செய்யாமல், பெற்ற பாசத்தினால் என்னை மார்போ டணைத்து முத்தமிட்டுச் சீராட்டிப் பாராட்டி வந்த பெரிய நன்றிக்கு யான் என்ன பிரதியுபகாரம் செய்யப் போகிறேன்? யான் வயதிலும் அனுபவத்திலும் இவ்வ ளவு முதிர்ந்தவனாகக் காணப் படினும், தங்களுடைய ஸ்வரூபத்தின் சாயையையும், குணாதிசயங்களின் பெருமையையும், எனக்காகப்பட்ட தங்கள் கஷ்டநிஷ் ரேங்களின் கொடுமையையும் இன்று நினைத்தபோதிலும் கண்ணீர் ஆறாகப்பெருகி அழச்செய்கின்றது. தங்களைப் போல தந்தையை இனி எக்காலத்தில் காணப்போகின் றேன்? இனி எந்த லோகத்தில் கொஞ்சிக் குலாவி தங் கள் கண்கள் குளிர எதிர் வந்து நிற்பேன்? இனி எந்த காலத்தில் என்னை அன்போடு நோக்கி, அடா கண் மணியே! என்று அமுதவாயால் அழைத்து முத்தமிடப் போகிறீர்கள். இனி எக்காலத்தில் எனது இகலோக பர

லோக சுகத்தைக் கருதி புத்திமதிகளை நயபயத்தால் சொல்லப்போகிறீர்கள்? எப்போதோவென்று ஏங்கி நிற்கிறேன். பாலிய இயற்கையினால் தாங்கள் சொன்ன திருமொழிகளின்படி நான் நடவாத தப்பிதத்தைக் கருதியோ, மற்றும் இந்த உலகப் பிரயாணத்தில் வெறுப்புற்றோ மற்றெந்த ஏதுவினாலோ, சம்சார தொல்லையாகிய குடும்ப பளுவை என்மீது சுமத்திவிட்டு தாங்கள் சதா சாந்த சுந்தர சுகாநந்த நாட்டிற்கு எழுந்தருளினீர். இந்த உலக வியாபாரம் மகா கஷ்டமானது; சிட்டுக் குருவியின் தலைமேல் பனங்காயை வைப்பதைப்போல என்மீது சுமத்திய சம்சார பாரம் கொஞ்ச நஞ்சமல்ல. ஆனையுலாவுங் காட்டில் பூனை உலாவத் துணிவதைப் போல, அடியேன் தமது குடும்ப காரியங்களைக் கிரமமாய் நடத்த சக்தியற்றவனாகி தவிக்கிறேன். ஆயினும் இனி எத்தனை காலந்தான் எனக்காகத் தாங்கள் பாடுபட்டு வருந்துவீர்கள். எப்படிப்பட்டவரும் ஒருகாலத்திலில்லா விட்டாலும் மற்றொரு காலத்திலாவது, இந்த உலக ஆடம்பரங்களையும் தேக பாதைகளையும் விட்டொழித்து சூக்ஷ்ம சரீரிகளாகி, நமது பரம பிதாவினிடம் சேர வேண்டியதுதானே. ஆகவே சூக்ஷ்ம சரீரிகளாக நிற்கும் தங்களைப்பின்னும் வருத்தவிதியில்லை; விதியில்லையாயினும் இந்த எனது தேகமும் இதைச் சார்ந்த இரத்தம், நரம்பு, எலும்பு முதலானவை தங்களுடையவையாம். தங்களுடைய இரத்த அணுரூபமே நானாக விருக்கிறேன். தங்களுடைய பெயரையும் தங்கள் பாட்டன் முப்பாட்டன் முதலான பாரம்பரிய சந்ததியின் பெயரையும் நான் வகித்துக்கொண்டு தங்களுடைய குடும்பத்தை நடாத்தி வருகிறேன். அப்படி நடாத்தி வருவதில் எனது அஜாக்கிறதையினாலாகிலும், சோம்பலினாலாகிலும், தங்க

ளுடைய குடும்பத்தைச் சீராக நடத்திவர, பிசகிப்போக லாம். அப்படிப் பிசகிப் போவதனால் தங்கள் பெயருக் கும் தங்கள் முன்னோருடைய மகிமையான பெயருக் கும் குறைவுகள் நேரிடக்கூடும். ஐயோ! நான் பிறந்து தங்கள் பெயருக்கும் தங்கள் சந்ததியார் பெயருக்கும் குறைவுகள் வந்தால் என்ன செய்கிறதென்கிற பயத்தி னாலே பிரமித்து, பின்னும் எனக்கு திடசித்தத்தையும் புத்திமதிகளையும் போதிக்க வேண்டுமென்கிற கவலை யினால், சூக்ஷ்ம சரீரியா யிருக்கும் தங்களை இந்தத் திரு நக்ஷத்திரத்தில் பிரார்த்திக்கிறேன். ஆகவே, ஓ அன் புள்ள ஐயா! என்னை ஆசீர்வதித்து ஆதரியும். மேலும் தங்களுடன் கூட சூக்ஷ்ம சரீரிகளாக இருக்கும் எனது பாட்டனார், ஆசாரியர், ரிஷிகள், எதிகள், முனிகள், மகாதிபதிகள் முதலான சகல பிதுர்தேவதைகளுக்கும் அடிமையின் அதிவிநய வந்தனங்களைச் சொல்லி அவர் களது ஆசீர்வாதத்தையும் அனுப்ப வேண்டுகிறேன். அவர்களும் தாங்களும் அருள்வடிவனாகிய பரமேசுவர ரிடம் நித்ய ஜீவனைப் பெற்றிருப்பதால், உங்களது ஆசீர் வாதம் இகத்துக்கும் பரத்துக்கும் இன்றியமையாத தென்றெண்ணி இந்தத் திருநாளில் எனது இஷ்ட பந் துக்களறிய சிரத்தையைக் காட்டி வேண்டுகின்றனன். அருள்மழை பொழிந்து ஆசீர்வதிப்பீர்களாக.

இறந்தவர் தாயாராகவிருந்தால் பின் வருகிறபடி பிரார்த்திக்கலாம்.

## தாயார் விஷயம்.

அன்பே உருவாகவமைந்த அருமைத் தாயே! தாங்கள் திரு நாட்டிற்கு எழுந்தருளிய இந்தத் திருநக்ஷத்திரத்தில் தங்களைத் தியானித்து வணங்கப் பாக்கியம் பெற்றேன். தாங்கள் என்னைப்

பத்துமாதம் சுமந்து பெற்றெடுத்துப் பாதுகாத்து பாலூட்டி தாலாட்டி நாளொரு மேனியாகவும், பொழுதொரு வண்ணமாக வும் வளர்த்து, என்னையும் ஓர் மனுஷனுக்கிய பரிசிரமத்தைப் பல்லாண்டு பல்லாண்டாகப் பிரஸ்தாபிப்பதினுலாகிலும் பல பெரிய புத்தங்களாக எழுதிப் பதிப்பிப்பதினுலும் முடியுமோ?

அடியேன் தங்களது கர்ப்பத்தில் தோன்றி ஜனித்தது முதல், தங்கள் ஆயுள்காலம் வரையில், நான் செய்த குறைவு குற்றங்களையெல்லாம் எந்த கணித நிபுணராலும் எண்ணி முடியாதென்று எனக்கே தெரியும். ஆம், என்னுல் தாங்கள்பட்ட பாடு கொஞ்சமல்ல; நான் செய்த தெல்லாம் தீங்கே யொழிய நன்றியறிந்த நன்மை கிடையாது. நான் சுகமான வாழ்க்கையி லிருந்து சீராட்டியதனுலுண்டான கொடுமைகளையும், நான் வியாதியினுல் வருந்தி விளைவித்த கொடுமைகளையும் தாங்கள் சகித்துக்கொண்டு, அலலும் பகலும் அறுபது நாழிகையும் அருமையோடு வாரியெடுத்து முத்தமிட்டு, என் பிராணனைக் காக்கத் தங்கள் பிராணனையே தத்தம்செய்து, என் சுத்தத் தைக் கருதி தங்கள் சுகவாழ்க்கைக்கு இன்றியமையாத நல்ல போஜனமும், நல்ல நித்திரையும்விட்டு, கெஞ்சாதவரைக் கெஞ்சி அஞ்சாதவருக்கஞ்சி, மிஞ்சித் தவம்செய்து, பஞ்சை போலாகி நெஞ்சமறிய கடவுளைத் துதித்து, நானோர் மனுஷனாகும்படிச் செய்த என் அருமையான தாயே, உங்களுடைய கஷ்ட நிஷ் டூரங்களுக்கு என்ன பிரதியுபகாரம் செய்யப்போகிறேன்? இனி எந்த ஜென்மத்தில உங்களைப்போன்ற உத்தம தாயைக் காணப் போகிறேன். இனி எந்தக்காலத்தில் உங்களைக் கண்ணாரக்கண்டு ஓடிவந்து கட்டித்தாவி முத்தமிட்டு என அம்மாவென்று வாயார அழைத்து எனது சுக சந்தோஷங்களைச் சொல்லப்போகிறேன்? அந்தோ! நான் வயதில் முதிர்ந்தவனுகி, மயிரும் வெளுத்து பேரன் பேத்திகளை எடுக்குங்காலமாகியும், உங்களுடைய அபார சமுத்திரத்தைப்போன்ற அன்பையும், மாத்ருவாத்சலியத்தையும், எனக்காகத் தாங்கள் பட்ட கஷ்டத்தையும், அதற்குத் தகுந்தபடி பிரதியுபகாரம் செய்ய வகையற்றதையும், எண்ண எண்ண என்

நெஞ்சம் துடித்து கண்ணீர் பெருகி கதறியழச் செய்கின்றதே ! ஓ! என் அன்புள்ள அம்மா ! நீங்கள் பரலோகத்திலிருக்கிறீர்கள்! உங்கள் உருவ நிழலையும், உண்மையான மாத்ரு வாஸ்சல்யத்தையும் உள்ளத்திலறிந்து உண்மையுடன் நன்றி யறிந்த வந்தனம் செய்கின்றேன்.

3 உங்களுடைய உலக குடும்பமாகிய நானும் எனது மனைவி மக்களும் இந்தச் சுப தினத்தில் உங்களைப் பக்தி பூர்வமாக வணங்கி நிற்கின்றோம். கருணையுடன் அங்கீகரிப்பீர்களாக. நானும் எனது மனைவி மக்களும் வயதில் மூதிர்ந்தவர்களென்றும், அப்படிப்பட்டவர்களுக்குத் தங்களைப்போன்ற மூத்தோர் ஆசீர்வாதம் அனுவசியமென்றும் அநேகர் நினைப்பார்கள். எனக்கோ அப்படியல்ல. நானும் என் மனைவி மக்களாதி நமது குடும்பத்தோரும் இனி எவ்வளவு காலம இந்த உலகத்திலிருக்கிறோமோ அத்தனை காலமும் உங்களுடைய ஆசீர்வாதத்தையும், மாத்ரு வாஸ்சலியத்தையும் மறவாமல் இருக்க பிரசாதிக்கும்படிக்கும் அதனால் நமது குடும்பமும் நமது தேசமும் பரிமளிக்கும்படிக்கும் பிரார்த்திக்கிறேன். நானும் எனது மனைவி மக்களாதி குடும்பமும் நீங்களன்போடருளிய செல்வம். ஆகவே உங்களை மறந்துவிடுவது எப்படி? மறந்துவிட முயன்றாலும் முடியாதே. ஆதலால் இந்த உலகத்தில் எனக்காகவும் என் குடும்பத்துக்காகவும் தாங்கள் பட்டபாடு கொஞ்சமல்ல. எத்தனையோவித கஷ்ட நிஷ்டூரங்களைப்பட்டு என் குடும்பமாகிய, பயிரை விதைத்து அதனை அன்பென்னும் அமிர்த ரசத்தை விட்டு வளர்த்தீர்கள். அந்த குடும்ப விருக்ஷம் பலவித கஷ்டங்களுக்குத் தப்பி, விளைந்து இப்போதுதான் பூபூத்து பிஞ்சுவிடப்பிரவர்த்திககின்றது. அதற்கு சத்தியம், சாந்தம், பக்தி, யோகம், ஞானம் என்னும், பிருதிவி அப்பு, தேயு, வாயு, ஆகாயமாகிய, மண், ஜலம், கொத்து, எருவு, வேலி முதலானவைகளால் அடியேன் பாதுகாத்தாலும், அருள் மழையாகிய, தங்களுடையவும், தங்கள் தாயார், பாட்டி, மூப்பாட்டிமுதலானதேவதைகளுடையவும் ஆசீர்வாதமின்றித் தழைத்

தோங்குமோ? ஆகாதாகாது. ஆகையால் ஓ! அருள் நிறைந்த அன்னையே! அடியேன்மீது கிருபை வைத்து உங்கள் அன்புள்ள குடும்பமாகிய என் வீட்டை ஆசீர்வதிப்பீர்களாக. உங்கள் உலக குடும்பமும், தாங்களிருக்கும் திருநாடும் என்றும் வாழ்வதாக-ஓம் சாந்தி சாந்தி சாந்தி

பிறகு ஆசாரியார் பின்வருமாறு பிரார்த்தித்து ஆசீர்வதிக்க வேண்டும்.

சர்வ வல்லமையுள்ள கடவுளே-இத்தெய்வீகமான சமயத்தில் நாங்கள் யாவரும் கேவலம் தூசியைப் போன்றவர்களாகவும் நீ யொருவனே சச்சிதானந்தனென்றும் உணர்வோமாக. இக்கணமிருப்பவரை மறுகணம் காணோம். உலகில் பெண்டு பிள்ளைகளையும் பந்துமித்திரர்களையும் மற்றுமுள்ள சம்பத்துக்களுடன் கூடிக்குலாவிக்கொண்டிருந்த ஆத்மா, தனியாய் யாதொரு துணையுமற்று பரமபதத்துக்கேகினது. ஆகையால் எம்மனது பரலோக வாஞ்சையிலீடுபடும்படி செய்யப் பிரார்த்திக்கிறோம். அதில் ஆசை பெருகி, நித்திய பதவிக்கு அருகராகும்படி திருத்தியருளும். எங்களைவிட்டு நீங்கிய அவரான்மாவுக்கு நித்திய பதவியின் வைபவங்களைக் காட்டியருளி, மானசீகமாக நாங்களும் அவ்வான்மாவோடு சேர்ந்தவர்களாகவே இருக்கும்படி அநுக்ரகிப்பாய். நினது அகண்ட கருணையினால் இவ்வுலகம் பரமபதத்திற்கு ஈடாகக்கடவது. இதில் நாங்களிருக்கும்போதே, அதனுடைய திவ்விய இரகசியத்தை சிறிது உணர்ந்தவர்களாகவும், நினது பாக்கியம் பெற்ற நித்தியசூரிகளின் கூட்டத்தில் உன்னோடு வாழ இப்போதே சேரும்படி அனுக்கிரகிப்பாய்.

பிறகு சிரார்த்த காலதானங்களை அடியிற்கண்டபடி செய்யவும்.

௵ ௴ ௳ பக்தி வினயத்துடன் ஈசுவரப்ரீதியார்த்தமாக புண்ணிய லோகத்தை யடைந்த இன்னாருடைய பெருமையின் பொருட்டு இத்தர்மங்

களைச் செய்கின்றேனென்று செய்யக்கடவர். பிறகு பந்து மித்திரர்களுக்கு போஜனமும் ஏழைகளுக்கு போஜனத்துடன் வஸ்திரதானமும் செய்யலாம்.

## வருஷ திதி

இல்லறத்தார் பிரதி வருஷம் பிதா மாதாக்களுக்குசிரார்த்தம் செய்கிறதாயிருந்தால் மேற்சொன்ன பிதா மாதா விஷயமான ப்ரார்த்தனைகளையும், பாடலையும் படிக்கவேண்டியது.

## கிரகப்பிரவேசமெனும்
## புதுவீடு புகுவோர் செய்யும் கடவுள் வணக்கம்.

---

ஆறுசீர் விருத்தம்.

கடலுலகில் நல்லறமாம் இல்லறத்தை
நனிதொடங்கிக் கதிக்கச் செய்து
திடமுறவே வாழவெனச் சமைத்திட்ட
இவ்வில்லந் திகழப் புக்கே
இடமுடைய நல்வாழ்வு செயத் தொடங்கும்
எங்கட் கிங் கின்பே செய்து
புடவியிதில் வாழ்வுதிரு அடைவிப்பாய்
கடவுளெனும் பொருணீ தானே.



# விளம்பரம்.

---

வேத சாஸ்திரங்களுக்கிணங்க, சமத்துவம் சகோதரத்துவம், சுயேச்சை, சுயமரியாதை முதலிய உண்மைத் தத்துவங்களைப் போதிக்கும்

| | | | |
|---|---|---|---|
| I. | விதவா விவாக விளக்கம் | | 0—7—0 |
| | ௸ | 6 பிரதிகள் | 2—4—0 |
| II. | சர்வ வருண சமரச விளக்கம் | | 0-14—0 |
| | ௸ | 6 பிரதிகள் | 4-12—0 |
| | ௸ இரண்டு புத்தகங்களை சேர்த்து வாங்குவோருக்கு | (1-செட்டு) | 1—4—0 |
| | ௸ | 6-செட்டுகள் | 6—8—0 |
| III. | சமரச சடங்கு விளக்கம் | | 0—3—0 |
| | ௸ | 6-பிரதிகள் | 1—0—0 |
| | ௸ | 24 ,, | 3—4—0 |

**C. P. R.** பாரதி,
24, சௌந்திரபாண்டியன்பிள்ளை தெரு,
திருச்சினுப்பள்ளி

சுயமரியாதை முதலிய தத்துவங்களை விளக்கும் திராவிடன், குடி அரசு, ரிவோல்ட், ஜஸ்டிஸ் பத்திரிகைகளை ஆதரிக்கவேண்டும்.